Buy and Sell.Pro
PROPERTY MAX Realty Inc. Brokerage
WHERE PROPERTIES SOLD AT IT'S BEST!
FREE
வீடு வாங்க Or விற்க...
Selling? Or Buying?
Mohan Subramaniyam
Broker /President
Dir: 416-321-2300
REAL ESTATE MORTGAGE CLINIC

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686 / 647 857 0086
113A - 3351 Markham Rd
(IN RED BUILDING)

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 27, 26 மார்ச் 2021 இதழ்:- 48

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றம்



இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டதுடன் பிரேரணைக்கு ஆதரவாக 22 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் 14 நாடுகள் நடுநிலையும் வகித்துள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு குறித்து பிரித்தானியா தலைமையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 23 மார்ச் 2021 செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் 22 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்ததுடன் 11 நாடுகள் தீர்மானத்திற்கு (3ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## ஐ.நா.வின் கண்காணிப்புக்கு கனடா உதவும்!



இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வரவேற்கும் அதேவேளை அங்கு இடம் பெற்று வரும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா.வின் கண்காணிப்பு நடவடி. க்கைக்கு உதவுவதாக கனடா அறிவித்துள்ளது. இது தொடர்பாக கனடிய வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

குறித்த பிரேரணை இலங்கையில் நல்லி ணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவை பிரதிபலிக்கிறது. இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக சபை உறுப்பினர்களுடன் (4ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

RBC Royal Bank
Sugan Sathiaseelan
Mobile Mortgage Specialist
416-271-7584
sugan.sathiaseelan@rbc.com
Your new home doesn't come with mortgage advice. I do.
Advice you can bank on

## ஜெனிவா தீர்மானத்தினால் நெருக்கடி அதிகரிக்கின்றதா? விபரங்கள் உள்ளே!



BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct: 416-624-7971 Office: 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

Residential insured 5 yrs fixed 1.84%
For All Your Mortgage Needs
Kethesvaran Rasiah
Mortgage Agent
647 504 5566
MORTGAGE ALLIANCE Access Inc.
Rates are subject to change without notice, OAC only
Independently Owned and Operated Lic 11404

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



**Team SIVA** WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



18 Years Real Estate Experience

HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Birchmond/Ellesmere



**Scarborough** **$599,000**
2 Bedrooms With 2 Washrooms,
Fully renovated, Clean & Brigh Unit

### Eglinton/Kingston Rd




**Toronto** **$495,000**
Bedrooms: 3 Washrooms: 2
Overlook Green Space,Park & School

### Midland/Eglington



**Scarborough** **$1,199,900**
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Constructed 2nd Story Addition

### Welland City, Niagara



**Niagara** **$550,000**
Bedrooms: 3+2 Washrooms: 2
Lot 45x103, Detach Bungalow

### Sheppard And Meadowvale




**Scarborough** **$609,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Fantastic Open Concept Layout

### Morningside/Ellesmere




**Scarborough** **$449,900**
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Freshly Painted Townhouse

### Ritson Rd N/ Rossland Rd E




**Oshawa** **$999,900**
Bedrooms: 5+2 Washrooms: 3
Beautiful Investment Property

### Salem/ Taunton



**Ajax** **$859,900**
Bedrooms: 3 Washrooms: 3
Stunning Hardwood On Main Floor

### Moira St W/ Palmer




**Belleville** **$499,000**
Bedrooms: 3 Washrooms: 1
**Large Parcel Of Land**

### Burhamthrope/Hurontario




**Mississauga** **$569,000**
Bedrooms: 2 Washrooms: 1
Luxury Living Space Of 785 Sq Ft

### Brock St N & Maple St W



**Whitby** **$650,000**
Bedrooms: 3 Washrooms: 4
Close To Top Rated Schools.

### Parkside Dr /Mosaic Dr



**Hamilton** **$749,000**
Bedrooms: 3 Washrooms: 3
Only 2.5 Year Old Stunning home

### Markham & Eglinton





**Scarborough** **$1,875**
Bedrooms: 2 Washrooms: 2
Eat-In Kitchen, Large Balcony.

### The West Mall/Eva




**Toronto** **$2,000**
Bedrooms: 2 Washrooms: 2
Modern Kitchen ,Quartz Cout. Tops

### Mclevin & Tapscott




**Scarborough** **$1,500**
Bedrooms: 1 Washrooms: 1
Basement For Lease

### Grandview Rd / Woodstream Ave



**Oshawa** **$1,414,900**
Bedrooms: 4 Washrooms: 4
About 5 Years Old, 3,322 Sq Ft.

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

உங்கள் வீட்டு அடமானக்கடன் தேவைகளைப் பூர்த்தி செய்திட, கனடாவின் முதன்மை வங்கியில் 25 வருடங்களாக பணிபுரியும் என்னை நாடுங்கள்...

RBC Royal Bank

CONTACT ME FOR ALL YOUR MORTGAGE & REFINANCE NEEDS IN #1 BANK IN CANADA

Siva S. Nadesan
Senior Account Manager
Residential Mortgages
Tel: 416-998-9842
Cell: 416-854-8678
siva.nadesan@rbc.com
mortgage.rbc.com/siva.nadesan



## இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றம்



இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டதுடன் பிரேரணைக்கு ஆதரவாக 22 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் 14 நாடுகள் நடுநிலையும் வகித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு குறித்து பிரித்தானியா தலைமையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

23 மார்ச் 2021 செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 4.00 மணியாளவில் முன்னெடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் 22 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்ததுடன் 11 நாடுகள் தீர்மானத்திற்கு எதிராகவும் 14 நாடுகள் நடுநிலையாகவும் வாக்களித்திருந்தன.

இந்நிலையில் இலங்கையின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில் தீர்மானம் அமைந்துள்ளதாக வாக்கெடுப்பின் போது பிரித்தானியா தெரிவித்துள்ளது. அத்துமீறிய தலையீடாகவே இலங்கைக்கு எதிரான தீர்மானம் அமைந்துள்ளது எனவும் இலங்கை அதனை கடுமையாக எதிர்ப்பதாகவும் அமர்வில் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு எதிரான தீர்மானம் அரசியல்மயப்பட்ட இரட்டை நிலைப் பாட்டையுடையதென ஜெனிவா அமர் வில் சீனா தெரிவித்துள்ளது. மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் பொறுப் புக்கூறலிலும் இலங்கையின் ஈடுபாட்டை தாம் வரவேற்பதாக பாக்கிஸ்தான் தெரி வித்துள்ளது.

நடுநிலையற்ற இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தாம் எதிர்ப்பதாக ஜெனிவாவில் ரஷ்யா அறிவித்துள்ளது.

இலங்கை தமிழர்களின் அனைத்து வித அபிலாஷைகளுக்கும் மதிப்பளித்து 13 அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள் என ஜெனிவாவில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை இலங்கை குறித்த தீர்மானத்திற்கு எதிரான வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா, பாகிஸ்தான், பங்களதேஷ், கியூ பா, ரஷ்யா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக ஜெனிவாவில் வாக்களித்துள்ளன.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டதுடன் பிரேரணைக்கு ஆதரவாக 22 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் 14 நாடுகள் நடுநிலையும் வகித்துள்ளன.

## சிறுபான்மையினரின் மத, இன உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் நீண்ட கால பாதுகாப்புக்கு அவசியமென அமெரிக்கா வலியுறுத்து

இலங்கையில் இன மற்றும் மத சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முதன்மை துணை செய்தித் தொடர்பாளர் ஜலினா போர்ட்டர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான மனித உரிமை பேரவை தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றே மனித உரிமைகளை மதிப்பதிலும் எதிர்கால அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு அர்ப்பணிப்பதிலுமே இலங்கையின் நீண்டகால பாதுகாப்பும் பொருளாதார வளர்ச்சியும் தங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இன மற்றும் மத சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு இலங்கையை கேட்டுக்கொள்வதற்காகவே அமெரிக்கா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது என அவர் தெரிவித்துள்ளார். மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும் கடந்த கால மனித உரிமை மீறல்களுக்கு தீர்வை காண்பதற்கான நம்பகத்தன்மை மிக்க அர்த்தபூ ர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் இலங்கையை கேட்டுக்கொள்வதற்காகவே அமெரிக்கா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் அறிக்கையிடும் தேவைகளை தீர்மானம் விஸ்தரித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர் எதிர்கால பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளுக்காக ஆதாரங்களை சேகரிப்பதற்கான ஆணையையும் வழங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD - 14
(MARKHAM / EELESMERE)

3 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

4 AGP MART
4A WADE AVE
TORONTO

5 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

6 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

**மொன்றியல் தொடர்புகளுக்கு**
**மார்சே துர்க்கா**
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**திருமண சேவை**

உங்கள் விருப்பத்திற்கேற்ப
மண மக்களைத் தெரிவு செய்ய
எங்களை அழையுங்கள்.
905 554 1545

**Balachandran Law Office**
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# ஐ.நா.வின் கண்காணிப்புக்கு கனடா உதவும்!



இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வரவேற்கும் அதேவேளை அங்கு இடம் பெற்று வரும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா.வின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு உதவுவதாக கனடா அறிவித்துள்ளது. இது தொடர்பாக கனடிய வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

குறித்த பிரேரணை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவை பிரதிபலிக்கிறது .

இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக சபை உறுப்பினர்களுடன் இணைந்து கனடா பணியாற்றியது.

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தின் மீறல்கள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும், பகுப்பாய்வு செய்யவும் பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை கட்டாயப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பொறுப்புக்கூறலை புதிய தீர்மானம் முன்வைக்கிறது.

ஆகவே எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்கு இந்த ஆணை முக்கியமானதாக இருக்கும் இந்நிலையில் மனித உரிமைகள் தொடர்பான கடமைகளை நிலை நிறுத்தவும், தண்டனையை முடிவுக்கு கொண்டு வரவும், ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல் முறையை மேற்கொள்ளவும் கனடா இலங்கையை தொடர்ந்து வலியுறுத்தும். இந்தத் தீர்மானம் இலங்கைக்கு பாதுகாப்பான, அமைதியான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு படியாகும்.இந்த இலக்கை நோக்கிச் செல்லும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க கனடா தயாராக இருப்பதாகவும் கனடிய வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ தெரிவித்துள்ளார்.

## இலங்கை தொடர்பாக ஆராய மனிதஉரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் சட்ட ஆலோசகர்களையும் புலனாய்வாளர்களையும் நியமித்துள்ளது

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் (Office of the High Commissioner for Human Rights(OHCHR) இலங்கையை உன்னிப்பாகக் கண்காணிக்கும் செயல் முறையைத் தொடங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.ஐ.நா பொதுச் சபை இந்த ஆண்டின் பிற்பகுதியில் நிதியுதவி அளித்தவுடன் மற்ற தொடர்புடைய பணிகள் செயல்படுத்தப்படும் என மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 23 மார்ச் 2021 (செவ்வாய்க்கிழமை) நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து, ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம், இலங்கையை உன்னிப்பாகக் கண்காணிக்கும் பணியைத் தொடங்கும் என்றும் அதன்படி, இலங்கையில் பணிபுரிய 12 புதிய ஊழியர்களை நியமிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அவர்களில் சர்வதேச குற்றவியல் நீதி குற்றவியல் விசாரணைகள் மற்றும் அணியை ஒருங்கிணைத்து ஒரு தகவல் மற்றும் சான்றுகள் சேகரிக்கும் உத்தியுடைய ஆய்வாளர்கள், இரண்டு புலனாய்வாளர்கள், மனித உரிமை அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பின் ஆதரவு அதிகாரிகள் ஆகியோரை மேற்பார்வையிடுவதற்கான அனுபவமுள்ள சட்ட ஆலோசகர்கள் உள்ளனர்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலின் முன்னேற்றம் உட்பட இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமை குறித்த அதன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையை மேம்படுத்த உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கோத்தா அரசுக்கு அமெரிக்கா விடுத்துள்ள செய்தி

இலங்கையில் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்காக ஐநா மனித உரிமை பேரவை தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளதாகவும் எனவே இன்றே மனித உரிமை.களை மதிப்பதிலும் எதிர்கால அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு அர்ப்பணிப்பதிலுமே இலங்கையின் நீண்டகால பாதுகாப்பும் பொருளாதார வளர்ச்சியும் தங்கியுள்ளது என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முதன்மை துணை செய்தித் தொடர்பாளர் ஜலினா போர்ட்டர் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் இன மற்றும் மத சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு இலங்கையை கேட்டுக்கொள்வதற்காகவே அமெரிக்கா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது என அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும் கடந்த கால மனித உரிமை மீறல்களுக்கு தீர்வை காண்பதற்கான நம்பகத்தன்மை மிக்க அர்த்தபூ ர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் இலங்கையை கேட்டுக்கொள்வதற்காகவே அமெரிக்கா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் அறிக்கையிடும் தேவைகளை தீர்மானம் விஸ்தரித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், எதிர்கால பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளுக்காக ஆதாரங்களை சேகரிப்பதற்கான ஆணையையும் வழங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்**

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

**அம்பாள் அடியார்களே!**

ஒன்றாரியோ மாகாணத்தின் கோவிட்-19 விதிகளுக்கு உட்பட்டு அம்பாள் அடியார்கள் ஒவ்வொருவரும் வீட்டில் இருந்தவாறே அம்பாளை வழிபடுங்கள். இதுவே அரசின் வேண்டுகோளுமாகும் என்பதையும் ஆலயம் உங்களுக்கு நினைவுபடுத்துகின்றது. அனைவரும் ஒற்றுமையோடு போராடி தொற்று நோயை வெல்வோம். அனைவரும் சகல நலன்களும் பெற்று உலகத்தில் நோயின் தாக்கம் ஒழிந்து நலமும் வள மும் கிடைக்க அம்பாள் அருள் புரிவாராக.

**26 மார்ச் 2021 வெள்ளிக்கிழமை- பிரதோஷ விரதம்**

**27 மார்ச் 2021 சனிக்கிழமை - பங்குனி உத்தரம்**

**சிவன் பார்வதி திருக்கல்யாணம்**

**இரவுப் பூஜை 7.00 மணிக்கு நடைபெறும்**

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளலாம் 416 213 0110

- ஆலய தர்மகர்த்தா சபையினர் -

# ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் இந்தியா பேசியது என்ன?

மாகாணசபை தேர்தல்கள் விரைவில் நடத்துதல் மற்றும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் வலியுறுத்தியுள்ள இந்தியா ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பொருத்தமான தீர்மானங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை குறித்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பிற்கு முன்னதாக இந்திய பிரதிநிதி கருத்து தெரிவிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

நெருங்கிய அயல்நாடு என்ற அடிப்படையில் 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கையின் நிவாரணம் மீள் குடியேற்றம் புனர்வாழ்வு மற்றும் புனர் நிர்மாண நடவடிக்கைகளிற்கு இந்தியா பங்களிப்பு செய்துள்ளது.

எங்கள் அபிவிருத்தி உதவிகள், வாழ்வாதாரத்தை மீள ஏற்படுத்துதல் பொருளாதார மீள் எழுச்சி குறித்து கவனம்



செலுத்துபவையாக காணப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையின் வடக்குகிழக்கு பகுதிகளில்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை இரண்டு அடிப்படை விடயங்களால் வழிநடத்தப்படுகின்றது.

ஒன்று சமத்துவம் நீதி, கௌரவம், சமாதானம் ஆகியவற்றிற்கு தமிழர்களிற்கான எங்கள் ஆதரவு.

இரண்டாவது இலங்கையின் ஐக்கியம் ஸ்திரத்தன்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டினை உறுதி செய்வது.

இரண்டு இலக்குகளும் ஒன்றுடன் ஒன்றிற்கு ஆதரவானவை. இரண்டு நோக்கங்களையும் பரஸ்பரம் நிறைவேற்றுவதிலேயே இலங்கையின் முன்னேற்றம் உறுதிப்படுத்தப்படும். மாகாண சபைக்கான தேர்தல்களை விரைவில் நடத்துதல் மற்றும் இலங்கையின் அரசமைப்பின் 13வது திருத்தத்திற்கு ஏற்ப அனைத்து மாகாணசபைகளும் வலுவான விதத்தில் செயற்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளட க்கிய அதிகாரங்களைப் பகிர்வது குறித்த தனது அர்ப்பணிப்புகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களுக்கு இந்தியா ஆதரவளிக்கின்றது.

அதேவேளை ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பொருத்தமான தீர்மானங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என நாங்கள் கருதுகின்றோம்.

இலங்கை அரசாங்கத்தை நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு தீர்வைக் காணுமாறும் அனைத்து பிரஜைகளினதும் அடிப்படை சுதந்திரமும் மனித உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்தும் ஆக்கபூ ர்வமான ஈடுபாட்டைக் கொண்டிருக்குமாறும் இலங்கை அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றோம்.

மனித உரிமை பேரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பை நோக்கி முன்னேற வழிவகுக்கும் என ஐக்கிய நாடுகளின் மத சுதந்திரம் குறித்த விசேட அறிக்கையாளர் அஹ்மட் சஹீட் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை இலங்கை தொடர்பான முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இது நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பை நோக்கி முன்னேற வழிவகுக்கும் எனக் கருதுகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# அரசின் அலட்சியப் போக்கால் இலங்கை மீது புதிய தீர்மானம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா தெரிவிப்பு!



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அனைத்து மக்களினதும் உரிமைகளை உறுதி செய்கின்றது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் தகவல் ஒன்றைப் பதிவு செய்துள்ள அமெரிக்கத் தூதுவர், ஐ.நாவின் புதிய தீர்மானம் நீதி வழங்குவதிலும் பொறுப்புக்கூறலிலும் இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளை அங்கீகரிப்பதாகவும் கூறியுள்ளார்.

அவ்வாறே இலங்கை அரசின் கடந்த கால ஆணைக்குழுக்களின் வாக்குறுதிகளும் பரிந்துரைகளும் நிறை வேற்றப்படாமல் போய் விட்டன என்பதையும் இந்தத் தீர்மானம் அங்கீகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை உறுதியான, அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கிய ஓர் எதிர் காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் கடந்த காலத்தின் வலி மிகுந்த விடயங்களுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும், எல்லாப் பிரஜைகளினதும் உரிமைகளை உறுதி செய்யவும் வேண்டும் என்றும் அலெய்னா டெப்லிட்ஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை ஐ.நா. தீர்மானத்துக்கான இணை அனுசரணை நாடு என்ற அடிப்படையில், இலங்கையின் நீண்ட கால அமைதி மற்றும் சுபீட்சத்துக்காக அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஆதரவளித்த இணைத்தலைமை நாடுகள் குழுவின் ஏனைய நாடுகளுக்கும் ஜெனீவாவிற்கான பிரித்தானியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஜஜீலியன் ப்ரெய்த்வெய்ட் (Julian Braithwaite) நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தனது ருவிட்டர் பதிவில் கருத்து தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவின் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு தொடரும் என்பது முக்கியமானதாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா.மனித உரிமைகள் சபையில் தீர்மானம் வெற்றி பெறக் காரணமாக இருந்த நாடுகளுக்கு கூட்டமைப்பு நன்றி தெரிவிப்பு!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றிய நாடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

தீர்மானத்தைக் கொண்டு வந்த பிரிட்டன் உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளுக்கும் தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கும் தமிழ் மக்களின் சார்பிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம் என்று கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்த இந்தியாவுக்கு மூன்று வகைகளில் நன்றியை அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்கின்றோம் என்று ஜெனிவாவில் தெரிவித்தமைக்காகவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூ ர்த்தி செய்யும் வகையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்தமைக்காகவும், மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்தியமைக்காகவும் இந்தியாவுக்கு மூன்று வகைகளில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்' எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறினார்.

இதேவேளை ஐ.நா. தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளே சர்வதேசத்தின் நிலைப்பாடு எனவும், இதை உணர்ந்து இலங்கை அரசு செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதே நேரம் ஐ. நா மனித உரிமைகள் பேரவையில் ஸ்ரீலங்கா மனித உரிமை தொடர்பாக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இந்தியாவின் நிலைப்பாடு கவலை அழிப்பதாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி கே.சுரேந்திரன் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். இந்தியா எமது அண்மையில் இருக்கும் எங்கள் நலன்களில் அக்கறை கொண்ட நாடாக நாம் நம்பி வந்ததோடு இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பில் காத்திருந்தோம்.

இந்த சந்தர்ப்பத்தில் எமது மக்களுக்கான நீதியைப் பெற சர்வதேச மட்டத்தில் இந்தியாவின் ஆதரவு மிக அவசியம் என்பதை வலியுறுத்துவதோடு நடுநிலைமை போக்கானது எமது தமிழ்த் தேசிய இனம் அவர்கள் மீது கொண்ட நம்பிக்கையை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

எதிர்காலத்தில் எம்மக்களுக்கான நீதியை சர்வதேச சமுகத்தின் நேர்மையான ஆதரவோடு, இந்தியாவின் காத்திரமான பங்களிப்பின் மூலமாக எங்களுக்கான பரிகார நீதி, புலன் விசாரணை மற்றும் அரசியல் தீர்வு என்பவற்றை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கும் பரிபூ ரண இந்தியாவினுடைய ஆதரவைப் பெறுவதற்கும் அரசியல் ரீதியான நகர்வினை மேற்கொள்ள நாங்கள் உறுதி பூ ண்டிருக்கிறோம் எனத் தெரிவித்துள்ளது.


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Phone : 416-289-9229

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# ஏப்ரல் 21க்கு முன் அரசாங்கத்திற்கு கால அவகாசம் இல்லையேல் போராட்டம் என்கிறார் பேராயர் மல்கம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் தவறிழைத்தவர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களையேனும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறில்லை எனில் நீதி கோரி நாடளாவிய ரீதியல் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

எத்தகைய சவால்கள் ஏற்பட்டாலும், சூ ழ்ச்சிகளை முன்னெடுக்கும் அமைப்புக்களுக்கு அடிபணியாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை எவருக்கும் அஞ்சாமல் மக்களுடன் இணைந்து போராடுவதாகவும் பேராயர் தெரிவித்தார்.

மேலும் கூறுகையில், யார் மக்களை காட்டிக் கொடுத்தாலும் நாம் பாதிக்கப்பட்ட மக்களை கைவிடப் போவதில்லை. நாம் பாதிக்கப்பட்ட மக்களுடனேயே இருக்கின்றோம். எவ்வாறான சவால்கள் ஏற்பட்டாலும், எவ்வாறான அமைப்புக்கள் செயற்பட்டாலும் நியாயம் நிலை நாட்டப்படும் வரை நாம் மக்களுடன் இணைந்து செயற்படுவோம். அந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம்.

நியாயம் நிலை நாட்டப்படும் என்று கூறுவது மாத்திரமல்ல. அதனை நடைமுறையில் செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். இந்த பாரிய பொறுப்பை என்னால் தனித்து செய்ய முடியாது என்பதை மக்கள் அறிவார்கள். இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை என்னுடனேயே உள்ளது என்பதை நான் அறிவேன். அது எனக்கு பாரிய பலமாகும்.

அனைவரும் ஒன்றிணைந்து மக்களின் பிரச்சினைக்கு தீர்வினைக் காணுவோம் என அழைப்பு விடுக்கின்றேன். ஒற்றுமையுடன் முன்னோக்கிச் செல்வோம். சூ ழ்ச்சிகளை முன்னெடுக்கும் சக்திகளுக்கு கீழ்படியாமல் மக்களுக்காக ஒன்றிணைந்து சேவையாற்றுவோம்.

நாமனை வரும் ஒற்றுமையாக செயற்பட்டால் குண்டு தாக்குதல்களை முன்னெடுத்த வர்கள் தொடர்பில் இறைவன் எமக்கு வெளிப்படுத்துவார் என்று நம்புகின்றேன். எனவே நாம் எதற்கும் அஞ்சப் போவதில்லை என்றார்.

# ஐ.நா. மனித உரிமை தீர்மானம் குறித்து ஹரி

ஜெனிவாவில 22 பெரும்பான்மை வாக்குகள் ஆதரவாகவும், 11 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டும், 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலும் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானம் இலங்கையில் இடம் பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறலை அடைவதற்கான முக்கியமான ஒரு முன்னேற்றப்படியாகும்.

பொறுப்புக்கூறலை முன்னேற்றுவதற்கு இலங்கை தவறியுள்ளதை இந்தத் தீர்மானம் காட்டுகிறது. இந்தத் தீர்மானம் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் கண்காணிப்பில் மேலதிகமாக சுதந்திரமான, சர்வதேச விசாரணை ஒன்றை உருவாக்கிறது. இந்தத் தீர்மானம், மேலதிக பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளுக்கான மூலோபாயங்களை முன் வைக்குமாறும், பேரவைக்குக் கிரமமாக அறிகையிடுமாறும் உயர் ஆணையாளருக்கு ஆணையிடுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை 2009ஆம் ஆண்டு இந்த



விடயத்தை எடுத்துக்கொண்ட பின்னர் நிறைவேற்றப்பட்ட மிகப் பலமான தீர்மானமாக இது அமைகிறது. இலங்கை குறித்த மையக் குழுவின் நாடுகளின் கடின உழைப்பையும், அவர்கள் வழங்கிய தலைமைத்துவத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தைப் பலப்படுத்தி நிறைவேற்றுவதற்கு ஜெனிவாவிலும் கொழும்பிலும் உள்ள கனேடிய தூதரகங்களும், கனேடிய வெளியுறவு அமைச்சர் மார்க் கார்னோவும் (Marc Garneau), நாடாளுமன்ற செயலாளர் றொப் ஒலி:.பண்டும் (Rob Oliphant), மையக் குழுவுடன் இணைந்து கவனத்துடன் பணியாற்றினார்கள். அவர்களது முயற்சிகளுக்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். இந்தத் தீர்மானம் இலங்கையில் புரியப்பட்ட அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டோருக்கும், தப்பிப் பிழைத்தோருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது. இலங்கையில் தமிழ் மக்கள் மீது போர்க் குற்றங்களையும், மனித இனத்துக்கு எதிரான குற்றங்களையும், இனப் படுகொலையையும் புரிந்தவர்கள் நீதியில் இருந்து தப்பிவிட முடியாது.

இன்றைய தீர்மானம் எங்களை அதற்கு ஒரு படி நெருக்கமாகக் கொண்டு செல்கிறது. உயர் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட புதிய ஆணைக்கு ஒத்துழைக்குமாறு அனைவரையும் நான் ஊக்குவிக்கிறேன்.

நாம் இலங்கையில் புரியப்பட்ட மீறல்களுக்குப் பொறுப்புக் கூறலைத் தொடர்ந்து கோருவதுடன், இந்த விடயத்தைச் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்து வைத்திருப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.


SHIVA SAI DURGA ASTROLOGICAL CENTER



Pandit: Kumara swamy



Most Powerful Spiritual Healer
We can Handle any Problem
25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்ப்பவர்
உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck & Jadoo & Give 100%,Life Long Protection
கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து
ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக
தீர்வு சொல்லப்படும்
எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்
Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result
Call for Appointments/Walk ins Welcomed 647-766-9775
2607 Eglinton Ave E Scarborough, M1K 2S2,
UPSTAIRS ERRA MARKET, EGLINTON & BRIMLEY

# ஐ.நா. தீர்மானம் மீது தமிழகக் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி இந்தியா தயக்கம் காட்டியது ஏன்?

இலங்கை உள்நாட்டுப் போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அந்நாட்டு அரசுக்கு எதிராக ஐநா மனித உரிமைகள் கவுன்சிலில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் 22க்கு 11 எனும் அடிப்படையில் நிறைவேறியது.

இந்தியா, ஜப்பான், இந்தோனீசியா உள்ளிட்ட 14 நாடுகள் இந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. சீனா, பாகிஸ்தான், ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன.

இலங்கை உள்நாட்டுப் போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டன என்று கூறி அவற்றின் மீதான விசாரணை கோரும் தீர்மானம் ஒன்றை பிரிட்டன் ஐநா மனித உரிமைகள் ஆணையத்தில் சென்ற பிப்ரவரியில் கொண்டு வந்தது. இந்த தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தில் நிறைவேற்றப்படுவது இலங்கை அரசுக்கு ஒருவித சர்வதேச அழுத்தத்தை கொடுக்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது. அதே வேளை, இதை அப்படியே செயல்படுத்த வேண்டிய கட்டாயம் அந் நாட்டுக்கு இல்லை.

## இந்தியாவுக்கு தயக்கம் ஏன்?

இலங்கையின் பிரதான துறைமுகமாக இருக்கும் கொழும்பு துறைமுகத்தை மேம்படுத்த இந்தியாவுடன் இலங்கை ஏற்கனவே ஓர் ஒப்பந்தம் செய்திருந்தது. ஆனால் அதை இலங்கை துறைமுகங்கள் ஆணையமே மேம்படுத்தும் என்று கூறிய இலங்கை அரசு இந்தியா வுடனான ஒப்பந்தத்தில் இருந்து பிப்ரவரி தொடக்கத்தில் பின்வாங்கியது. இந்த ஒப்பந்தத்தை மீண்டும் தொடர்வ தற்கு இந்தியா முயற்சி செய்து கொண்டுள்ளது. எனவே இலங்கைக்கு எதிராக இந்திய அரசு வாக்களித்தால் இந்த துறைமுகத் திட்டத்தில் பின்னடைவு ஏற்படும் என்று இந்திய அரசு கருதுகிறது.

ராஜபக்ஷ சகோதரர்கள் இலங்கையில் ஆட்சிக்கு வந்த பின் நரேந்திர மோதி தலைமையிலான இந்திய அரசு இலங்கை அரசுடன் நெருக்கம் காட்டி வருகிறது. இலங்கைக்கு எதிராக வாக்களிப்பது இருநாட்டு வெளி யுறவுத் தொடர்புகளிலும் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப் புண்டு. அதே நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வருகிறது. இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தால் தேர்தல் நேரத் தில் பாரதிய ஜனதா கட்சிக்கு கடும் விமர்சனங்களை சந்திக்க நேரிடும். இந்த இரண்டு கூறுகளையும் கருத்தில் கொண்டே இந்திய அரசு இந்த தீர்மானத்தின் மீதான




வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என கருதப் படுகிறது.

மு.க. ஸ்டாலின், ப. சிதம்பரம் உள்ளிட்ட பல முக்கிய தமிழ் அரசியல்வாதிகள் இந்திய அரசு இலங்கை அரசு க்கு எதிராக ஐநா மனித உரிமைகள் மன்றத்தில் வாக்க ளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர். தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதை இந்திய நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியிருந்தனர்.

இதே போல உள்நாட்டுப் போரின் போது நடந்த மனித உரிமைகள் விசாரிக்கப்பட வேண்டும் என்று, இலங்கை அரசுக்கு எதிராக 2014ஆம் ஆண்டு ஐநா மனித உரிமைகள் மன்றத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மான த்தின் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இந்திய அரசு விலகியிருந்தது. அப்போது இலங்கைக்கு எதிராக 23 நாடுகளும் ஆதரவாக 47 நாடுகளும் வாக்களித்தன. அதற்கு முன்பு 2012 இலங்கை போரின்போது நடந்த மனித உரிமைகள் மீறல் தொடர்பான தீர்மானத்தில் இலங்கை அரசுக்கு எதிராக இந்திய அரசு வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழகக் கட்சிகளின் எதிர்ப்பு

இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்காமல் தவிர்த்த செயல் பாட்டை தமிழக கட்சிகளான திமுக, மதிமுக, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்டவை விமர்சித்துள்ளன.

திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், 'இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா. மனித உரிமை மன்றத் தில் கொண்டு வரப்படும் தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொண் டேன். ஆனால் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளா மல் இலங்கைக்கு ஆதரவாக வெளிநடப்பு செய்து நழுவியுள்ளது இந்திய அரசு. ஈழத் தமிழர்களுக்கு விரோதமான பாஜக அரசின் இந்த நிலைப்பாட்டுக்கு என்னுடைய கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

மத்திய அரசு முறையான விளக்கம் எதையும் சொல்ல வில்லை. ஐ.நா. மனித உரிமை மன்றத்திலாவது ஈழத் தமிழர்க்கு ஆதரவான நிலைப்பாட்டை மோடி அரசு எடுக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால், உலகத் தமிழர் களை ஏமாற்றி விட்டது மோதி அரசு. இன்றைய தினம் நடந்த வாக்கெடுப்பில் இந்திய அரசின் பிரதிநிதி பங்கெடு க்கவில்லை. இது ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு செய்த மன்னிக்க முடியாத மாபெரும் பச்சைத் துரோகம்' என்று கூறியுள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, 'இலங்கைத் தீவில் சிங்கள இனவாத அரசு, ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடத் தியது போர்க் குற்றம் அல்ல, அப்பட்டமான இனப்படு கொலை. ஒரு இலட்சத்து 37 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. 2009 தொடக்கத்தில், தமிழர்களை பட்டினி போட்டு கொன்றது இலங்கை அரசு.

இது குறித்து சர்வதேச சமுதாயம் தன் கடமையில் தவறியது. எனினும், அண்மையில் பிரிட்டன், ஜெர்மனி, கனடா, வடக்கு மாசிடோனியா, மாண்டினிரோ, மலாவி ஆகிய ஆறு நாடுகள் இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா.வின் மனித உரிமைக் கவுன்சிலில் தீர்மானம் கொண்டுவந்தன. இந்திய அரசு, இலங்கையை ஆதரிக்கும் என்று இலங்கை வெளிவிவகாரத்துறைச் செயலாளர் ஜெயநாத் கொலம்பிகே நான்கு நாட்களுக்கு முன்பு கூறினார்.

அதேபோல இன்று, இந்திய அரசின் பிரதிநிதி வாக்கெ டுப்பில் பங்கெடுக்காமல் வெளிநடப்புச் செய்தார். இது ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு செய்த மன்னிக்க முடி யாத பச்சை துரோகம் ஆகும். தமிழ்நாட்டில் தேர்தல் நடப்பதால் ஏமாற்றுவதற்காக வெளிநடப்புச் செய்தார்கள். இல்லையேல் இலங்கைக்கு ஆதரவாகவே ஓட்டுப்போட்டு இருப்பார்கள் என கூறியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர் ரவிக்குமார், 'வாக்கெடுப்பில் பங்கேற்காமல் தவிர்த்த தன் மூலம் இலங்கையை மறைமுகமாக இந்தியா ஆதரித்திருக்கிறது,' என தெரிவித்துள்ளார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஐ.நா.தீர்மானத்தை நிராகரிப்பதால் நெருக்கடிகளே அதிகரிக்கும் 3 தெரிவுகளே அரசுக்கு உள்ளன என்கிறார் தயான் ஜயத்திலக்க

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய பிரேரணை யில் இலங்கை பற்றி மீளாய்வுக் காலம் ஆறு மாதங்களாக சுருக்கப்பட்டுள்ள நிலையில் அப்பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தொட ர்ச்சியாக நிராகரித்தால் மேலும் மேலும் நெருக்கடிகளே அதிகரிக்கும் என்று ஐ.நா.வுக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும் எதிர்க்கட்சித்தலைவரின் சர்வதேச உறவுகளுக்கான சிரேஷ்ட ஆலோசகருமான கலாநிதி.தயான் ஜயத் திலக தெரிவித்திருந்தார்.

தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு மூன்று தெரிவுகளே காணப்படுகின்றன என்றும் அதில் எதனைத் தெரிவு செய்யப் போகின்றது என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் உள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் நிறைவேற்றப்படும் இலங்கை பற்றிய தீர்மானத்தினை நிராகரிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குண வர்த்தன, வெளிவிவகார செயலாளர் ஜெய நாத் கொலம்பகே ஆகியோர் தெரிவித் துள்ளமை தொடர்பில் கருத்து வெளி யிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்

இலங்கையில் இடம் பெற்றதாக கூறப் படும் விடயங்கள் சம்பந்தமாக ஆராய் ந்து அறிவதற்காக நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந் துரைகளை முறையாக நடைமுறைப் படுத்தியிருந்தால் தற்போது நடை பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரே ரணை உள்ளிட்ட நெருக்கடிகள் ஏற்படு வதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்காது.



துரதிஷ்டவசமாக தற்போது பதவியில் உள்ள ஆளும் தரப்பினருக்கு அவ்வித மான சமிக்ஞைகள் எதனையும் கடந்த காலத்திலும் சரி தற்போதும் சரி வெளிப் படுத்தவில்லை. இந்நிலையில் தற்போது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு முன்னதாகவே அதனை எதிர்ப்பதாக கருத்தக்களை வெளியிட்டு வருகின்றார் கள்.

இந்நிலையில் தற்போதைய பிரேரணை நிறைவேற்றப்படுமாக இருந்தால் இல ங்கை முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கூறப்பட்டுள் ளது. அந்த விடயங்களை மேற் கொண்டே ஆக வேண்டும்.

ஏனெனில் இலங்கை பற்றிய மீளாய்வு அறிக்கையினை சமர்ப்பிக்கும் காலம் ஆறு மாதங்களாக சுருக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கம் நல்லிணக்க, மற் றும் பொறுப்புக்கூறல் விடயங்களுக்கான செயற்பாடுகளைக் காண்பிக்க வேண்டும் அவ்வாறு இல்லாது விட்டால் மேலும் நெருக்கடிகளே ஏற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகரிக்கும்.

தற்போதை நிலையில் ஆட்சியாளர்களு க்கு மூன்று தெரிவுகளே காணப்படு கின்றன. முதலாவதாக முற்றாக ஐ.நா. தீர்மானத்தினை எதிர்த்து சர்வதேசத்தி னைப் பகைத்துக் கொண்டு நடை பெறுவைக்கு முகங் கொடுப்பதாகும்.

இரண்டாவதாக, மாகாண சபைமுறை களின் அதிகாரங்களை நீக்கி தேர்தலை நடத்தவிட்டு பின்னர் புதிய அரசிய லமைப்பின் பெயரில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நீக்கி விட்டு அதிகாரக்குவிப்பைச் செய்து இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தினை காலங் கடத்தி ஏமாற்றுவதோடு அவ்வப்போது நெருக்கங்களையும் விரிசல்களையும் காண்பித்து சீரற்ற நிலைமைகளை பேணுதல். அதுமட்டுமன்றி இனக்குழு மங்களை மையப்படுத்திய நெருக்கடி களை ஏற்படுத்துதல் மூன்றாவதாக, நிலைமைகளைப் புரிந்து ஐ.நா.தீர்மான த்திற்கு அமைவாக உள்நாட்டில் தேசிய ரீதியிலான வெளிப் படைத்தன்மையுட னான பொறிமுறையொன்றை ஏற்படுத்தி ஒவ்வொரு ஆறு மாத காலத்திற்கும் மீளாய்வு செய்யப்படும் போது முன்னே ற்றகரமான நிலைமைகளை வெளிப்படு த்தல். இந்தத் தெரிவுகளுக்குள் ஒன்றை கையிலெடுக்கும் போது அதற்கான பிரதிபலன்களும் உடனுக்குடனே கிடை க்கும் என்றார்.

இதேவேளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு கடுமையான பின்னடைவுகளை ஏற்படுத்தும் வகை யில் செயற்படும் அமைச்சர்களின் வாயை அடக்குமாறு ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி சந்திரபிரேம அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

சரத் வீரசேகர உள்ளிட்ட அமைச்சர்கள் வெளியிட்ட சில தேவையற்ற அறிக் கைகள் காரணமாக இலங்கை சில நாடுகளின் ஆதரவை இழக்க நேரிடும் என்று சந்திரபிரேம தெரிவித்துள்ளார்.

புர்கா மற்றும் நிகாப் ஆகியவற்றை தடை செய்வதற்கான நடவடிக்கை குறித்து சரத் வீரசேகர அளித்த அறிக் கைகளை சந்திரபிரேம குறிப்பிட்டுள் ளார்.

மனித உரிமைகள் பேரவையில் இலங் கையை ஆதரிக்கும் நாடுகளில் அரை வாசி முஸ்லிம் நாடுகள் என்றும், அதன் காரணமாக அந்த நாடுகளின் உணர்வு களை புண்படுத்தாமல் இருக்க இல ங்கை கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் புர்காவை தடை விதிக்க வர்த்தமானியில் கையெழுத்திட்டுள்ளதாக அமைச்சர் வீரசேகர தெரிவித்திருந்தார். புர்கா தடை தொடர்பில் இதுவரை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.


தற்பொழுது Markham நகரிலும்
(Near 14th Ave & McCowan Rd)

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
Locations: Brampton (Near Bovaird Rd & Brisdale Dr)
Markham (Near 14th Ave & McCowan Rd)
Tel: 416-524-0424

# இலங்கைக்கு எதிரான ஐ.நா.தீர்மானம்:- தமிழர்களுக்கு உண்மையில் பயன் தருமா?

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது. உடனடியாக தமிழ் மக்களுக்கு பலன் அளிக்குமா என்பது குறித்தும் போர்க் காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசைப் பொறுப்பேற்க வைக்குமா என்பது குறித்தும் கலவையான கருத்துகளே நிலவுகின்றன.

இந்த விவகாரத்தில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை, அடிப்படையற்ற, அநீதியான விடயங்கள் மற்றும் தவறான கருத்துக்களை உள்ளடக்கிய அறிக்கை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இலங்கை தமிழ் தரப்பு மற்றும் மனித உரிமை செயல்பாட்டாளர்களின் கருத்துகளை பிபிசி தமிழ் கேட்டறிந்தது.



இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், இதனூடாக தாம் முழுமையாக திருப்தி கொள்ள முடியவில்லை என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் கூறுகிறது.

அந்த சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜனிடம், ஜெனீவாவில் நடந்த ஐ.நா மனித உரிமைகள் மன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து கேட்ட போது 'இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள், ஈழத் தமிழர்கள் மீது அக்கறை கொண்டுள்ளதை எண்ணி மகிழ்ச்சி மட்டுமே கொள்ள முடியும்.' என குறிப்பிட்டார்.

ஈழத் தமிழர்களின் கோரிக்கையை பூ ர்த்தி செய்யாத தீர்மானமாகவே இந்த தீர்மானம் காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார். இந்த தீர்மானத்தின் ஊடாக உடனடி நீதிப் பொறிமுறையொன்று உருவாக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

காணாமல் போனோர் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்ட போதிலும், தமக்கான நீதி கிடைக்கவில்லை என அவர் கூறுகிறார். எனினும் இலங்கையில் எதிர்வரும் காலங்களில் ஆட்சி மாற்றம் ஏற்படுமாக இருந்தால், அனைத்து விடயங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு விடும் என்பதனால் இந்த தீர்மானத்தை எண்ணி மகிழ்ச்சி கொள்ள முடியாது என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், வட மாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், இந்த விடயம் தொடர்பில் பிபிசி தமிழுக்கு கருத்து தெரிவித்தார். ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தமிழ் மக்களுக்கு முழுமையாக நன்மை தருவதாக இல்லை என்றாலும், இலங்கையை பொறுப்புக்கூறலுக்காக ஐநா உள்ளீர்த்துக் கொண்டிருப்பது, தமிழர்களுக்கு சாதகமான நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.



இந்த தீர்மானத்திலிருந்து தாம் பிழையான வழியில் சென்று கொண்டிருப்பதை இலங்கை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும் என அவர் கூறுகின்றார். மேலும் பக்கச்சார்பின்றி இருந்தாலும் கூட தமிழ் மக்களின் பிரச்சனைகளை கரிசனையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை இந்தியா கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த தீர்மானமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்களுக்கு முழுமையாக நன்மையை ஏற்படுத்தாத போதிலும், அரசாங்கம் பொறுப்புக் கூறலில் இருந்து தப்ப முடியாது என்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கின்றார்.



ஐநாவில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை தோற்கடிப்பதற்காக இலங்கை அரசாங்கம் பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்ட போதிலும், அதில் தோல்வியடைந்துள்ளமையானது, தமிழ் மக்களுக்கு மன நிறைவை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கின்றார்.

எனினும் மகிழ்ச்சி அடையக்கூடிய மிகப் பெரிய வெற்றியாக தம்மால் இதனை கருத முடியாது எனவும் அவர் கூறுகின்றார். ஈழத் தமிழர் பிரச்னை, யுத்தக் குற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும், சாட்சியங்களை திரட்டுவதற்கான நடவடிக்கைகள் ஐநாவின் பொது சபையில் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் நிறைவேறாத நிலையிலும், சாட்சியங்களை சேகரிப்பதற்கான அமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் தமக்கான ஒரு பரிசு கிடைத்ததை போன்ற உணர்வு ஏற்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த தீர்மானத்தின் பின்னர் இலங்கை அரசாங்கம் சர்வதேச நெருக்கடிகளை சந்திப்பதற்கான பல கள முனைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். ஐநாவின் தீர்மானத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றாத பட்சத்தில், இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடும் எனவும் சிவாஜிலிங்கம் தெரிவிக்கின்றார்.

ஆட்சியிலுள்ள தலைவர்களும், படைத் தளபதிகளும் பிரச்னைகளை எதிர்நோக்கி, பல நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய நிலைமையை எதிர்கொள்வார்கள் என அவர் குறிப்பிடுகின்றார்.

ஐ.நா மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான பிரதீபா மஹனாமஹேவாவிடம்,



பிபிசி தமிழ் வினவியது. இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் காணப்படுகின்ற பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு காலக்கெடு வழங்கப்படும் என அவர் கூறுகின்றார். இவ்வாறு வழங்கப்படும் கால எல்லைக்குள், இலங்கை அரசாங்கம் அந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத பட்சத்திலேயே குறித்த தீர்மானம் பாதுகாப்பு சபை வரை செல்லும் என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த தீர்மானம் பாதுகாப்பு சபைக்கு செல்லுமாக இருந்தால், அதன் பின்னர் இலங்கைக்கு பாரிய பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என பிரதீபா மஹனாமஹேவா கூறுகின்றார்.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையானது, எதிர்காலத்தில் இலங்கைக்கு இருள் சூ ழ்ந்த நிலைமையை ஏற்படுத்துவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என அவர் குறிப்பிடுகின்றார்.

அதேபோன்று எதிர்வரும் காலங்களில் இலங்கை அரசாங்கம் குறித்த பரிந்துரைகளை நிறைவேற்றாத பட்சத்தில், நாட்டிற்கு எதிராக பாதுகாப்பு சபையின் ஊடாக பொருளாதார தடைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களும் காணப்படுவதாக அவர் தெரிவிக்கின்றார்.

தற்போது காணப்படுகின்ற நிலைமையில் எதிர்வரும் ஆண்டு கூட இலங்கைக்கு சார்பாக தீர்மானமொன்றை கொண்டு வர முடியாத நிலைமையே காணப்படுகின்றது என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த தீர்மானத்தின் ஊடாக உடனடி தாக்கங்கள் எதுவும் இலங்கைக்கு ஏற்படாது எனவும், சுமார் ஒரு வருட காலத்தின் பின்னரே பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவர் கூறுகின்றார்.

இந்த தீர்மானத்தில் இந்தியா உள்ளிட்ட 14 நாடுகள் வாக்களிப்பிலிருந்து தவிர்த்துக் கொண்டமை குறித்தும் அவர் கருத்து தெரிவித்தார். தமிழ் நாட்டில் தேர்தல் நடைபெறவுள்ளமையினாலேயே, இந்தியா வாக்களிப்பதிலிருந்து தவிர்த்துக் கொண்டதாகவும் அவர் கூறுகின்றார்.

பூ கோள அரசியலை அடிப்படையாகக் கொண்டே இந்தியா இந்த விடயத்தில் செயற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். இந்தியா இந்த தீர்மானத்திற்கு வாக்களித்திருக்கும் பட்சத்தில் அது தமிழக தேர்தலை பெரிதும் பாதிக்கும் சாத்தியம் காணப்படுவதனாலேயே, இந்தியா வாக்களிப்பதை தவிர்த்துக் கொண்டதாகவும் பிரதீபா மஹனாமஹேவா குறிப்பிடுகின்றார்.



ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில மணி நேரத்தில் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை செவ்வாய்க்கிழமை மாலையில் ஏற்பாடு செய்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினர். ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளுக்கு மாறாக மனித உரிமைகள் பேரவை செயல்பட முடியாது. குறிப்பிட்ட நாட்டை இலக்கு வைத்து அதற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற முடியாது என அவர் குறிப்பிட்டார்.

பிரிட்டன், மலாவி, ஜெர்மனி உள்ளிட்ட சில நாடுகள் இணைந்து கொண்டு வந்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாமல் போனதாகவும், காலனித்துவத்திலிருந்து விடுப்பட்ட நாடுகளை ஆட்சி செய்வதற்காக சிந்திக்கும் எண்ணத்தை நிராகரிக்கும் ஒரு சந்தர்ப்பமாகவே இதை கருத முடிகிறது என்றும் தினேஷ் குணவர்த்தன கூறினார்.

இலங்கையின் இறையாண்மை, சுதந்திரத்தை பாதுகாத்து அரச தலைவரினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் ஊடாக நீதியரசர் ஒருவரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு முதல் தெற்கு வரை தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து மக்களுக்கும் சுதந்திரமான சென்று வாழக்கூடிய ஒரு சூ ழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கீழ் அடிபணியாத மக்களின் சுதந்திரத்தை இலங்கை உறுதிப்படுத்தியுள்ளது என்றும் இந்த விடயங்களை நிராகரித்து, பிரிட்டன் தலைமையில் பல நாடுகள் ஒன்றிணைந்து கொண்டு வந்த இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

47 உறுப்பு நாடுகளை கொண்ட மனித உரிமை பேரவையில், இலங்கைக்கு எதிராக 22 வாக்குகள் மாத்திரமே கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். எஞ்சியுள்ள 25 நாடுகளில் 11 நாடுகள், பிரிட்டன் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்துள்ளதை பார்க்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதே போல பிரிட்டனின் தீர்மானம் மீது வாக்களிக்காமல் சுயாதீனமாக 14 நாடுகள் செயல்பட்டுள்ளதையும் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டினார். வல்லரசு நாடுகள் என கூறப்படும் இந்த நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்திற்கு 25 நாடுகளின் ஆதரவை பெற முடியவில்லை. அப்படியென்றால் பெரும்பான்மை நாடுகள், பிரிட்டனின் தீர்மானத் திற்கு ஆதரவாக இருக்கவில்லை. இதன் மூலம், பெரும்பாலான நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவே உள்ளது என்றே கருத முடிவதாக இலங்கை அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ள அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையில் வாக்களிக்காத இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவை இலங்கை அரசாங்கம் பாராட்டியுள்ளது. இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பான 46-1 தீர்மானம் 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்ற ப்பட்டது.

இந்நிலையில் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், லிபியா மற்றும் சூ டான் ஆகிய 14 நாடுகளின் ஆதரவிற்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராட்டுகளை தெரிவித்தார். இந்த விடயம் குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த 11 நாடுகளின் உறுதியான ஆதரவிற்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

நன்றி:- பிபிசி தமிழ்

# 9வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான். இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும். இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 420 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர். இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளு க்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க. உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்ற டைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்ற டைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும்.

அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும். புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 19 மார்ச் 2021 முதல் 26 மார்ச் 2021 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 19ம் பக்கத்தில் உள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி நாகரெத்தினம் இராஜதுரை

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களுடைய 31ம் நாள் நினைவு நாள் 21 மார்ச் 2021 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடுபத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கமலக்கண்ணன் அரசரெத்தினம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த கண்ணன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கமலக்கண்ணன் அரசரெத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாள் 26 மார்ச் 2021 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது நண்பர்கள் அன்பர்கள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கமலக்கண்ணன் அரசரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### சற்குணசிங்கம் ஞானகுணாளன்

சாவகச்சேரி தாமோதரப்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சற்குணசிங்கம் ஞானகுணாளன் அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 29 மார்ச் 2021 ஆகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சற்குணசிங்கம் ஞானகுணாளன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு நாள் 26 மார்ச் 2021 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு பிறேம்குமார்

யாழ்ப்பாணம் அரியாலைப் பிறப்பிடமாகவும் கனடா வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களுடைய 1வது ஆண்டு நினைவு நாள் 19 மார்ச் 2021 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு பிறேம்குமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு பாலசூரியர் கனகசூரியர்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விட மாகவும் கொண்டிருந்த அமரர் திரு பாலசூரியர் கனகசூரியர் அவர்களுடைய 31ம் நாள் நினைவு நாள் 21 மார்ச் 2021 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பாலசூரியர் கனகசூரியர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி நவமணி கதிரவேலு

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நவமணி கதிரவேலு அவர்களுடைய 31ம் நாள் நினைவு நாள் 22 மார்ச் 2021 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நவமணி கதிரவேலு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குகதாஸ் பொன்னம்பலம்
### திரு வைத்தீஸ்வரன் பொன்னம்பலம்

யாழ்.இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு குகதாஸ் பொன்னம்பலம் திரு வைத்தீஸ்வரன் பொன்னம்பலம் சகோதரர்களுடைய 35வது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2021 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குகதாஸ், திரு வைத்தீஸ்வரன் ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தி னருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




19 மார்ச் 2021 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சர்வானந்தன் பவளராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் வினோதனின் 27வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் வினோதன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




20 மார்ச் 2021 சனிக்கிழமை யாழ்.இடைக்காட்டைச் சேர்ந்தவர்களான திரு குகதாஸ் பொன்னம்பலம் திரு வைத்தீஸ்வரன் பொன்னம்பலம் சகோதரர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னார்களது நினைவாக அவர்களது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




21 மார்ச் 2021 ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலசூரியர் கனகசூரியர் அவர்களது 31ம் நாள் நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




21 மார்ச் 2021 ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களது 31ம் நாள் நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




22 மார்ச் 2021 திங்கட்கிழமை தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்.ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா அருணாசலம் அவர்களது 11வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




22 மார்ச் 2021 திங்கட்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலசூரியர் கனகசூரியர் அவர்களது ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




22 மார்ச் 2021 திங்கட்கிழமை சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி நவமணி கதிரவேலு அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




22 மார்ச் 2021 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனனியின் 2வது பிறந்த நன்னாளாகும். அன்றைய தினம் செல்வி ஜெனனி தனது பெற்றோர்கள், அண்ணர் கார்த்தி ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




23 மார்ச் 2021 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தர்மசீலன் அர்ச்சனா இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




26 மார்ச் 2021 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிந்துஜன் ஹம்சாயினி இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




26 மார்ச் 2021 வெள்ளிக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, திருவையாறு, வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன் அவர்களது 6வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
28வது ஆண்டு விழா
“இலக்கியப் பெருவிழா” நிகழ்வில்
இரா.சம்பந்தனின்
“விழியும் துளியும்” சிறுகதைத் தொகுப்பு
மாணிக்கவாசகர் வைத்திலிங்கத்தின்
“ஈழ மண்ணின்
அருந்தமிழ் மைந்தர்கள்”
நூல் வெளியீடு

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

Ontario


சமூக ஒன்றுகூடல்கள்
பயங்கரமான
விளைவுகளை
ஏற்படுத்தலாம்.
COVID-19 பரவுவதைத் தடுக்க
வீட்டில் தங்கியிருங்கள்.
ontario.ca/covid-19 மூலம் மேலும்
அறியுங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario

# ஜெனிவா தீர்மானத்தினால் நெருக்கடி அதிகரிக்கின்றதா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த தீர்மானம் எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே செவ்வாய் கிழமை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. 22 நாடுகள் ஆதரவாகவும் 11 நாடுகள் எதிராகவும் வாக்களிக்க இந்தியா உட்பட 14 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

வாக்களிப்பில் பங்கேற்காத நாடுகளின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்திருக்கின்றது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதால் அடுத்ததாக என்ன நடக்கும் என்ற கேள்வி இப்போது எழுப்பப்படுகின்றது.

“தமிழ் மக்கள் எதிர்பார்த்த பரிகார நீதியை இந்தத் தீர்மானம் பெற்றுத் தரப்போவதில்லை” என ஒரு தரப்பினர் சொல்கின்ற போதிலும் “இது தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் ஒரு திருப்புமுனையாக முன்னேற்றமாக அமைந்திருக்கின்றது” என மற்றொரு தரப்பினர் சொல்கின்றார்கள். பிரதான தமிழ்க் கட்சிகளைப் பொறுத்த வரையில் கூட இவ்வாறு முரண்பாடான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இது எந்த வகையிலும் தம்மைப் பாதிக்கப் போவதில்லை என அவர்கள் கூறுகின்றார்கள். “ஜெனிவா தீர்மானத்துக்கு தாம் அஞ்சப்போவதில்லை” என்பது அவர்களுடைய கருத்தாக இருக்கின்றது. ஆனால் பிரதான எதிர்க்கட்சிகள் இலங்கை எதிர்கொள்ளப் போகும் நெருக்கடிகளைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கின்றன.

## உள்நாட்டுப் பொறிமுறை

மீண்டும் ஒரு உள்நாட்டுப் பொறிமுறையைத் தான் இந்தத் தீர்மானமும் பரிந்துரைத்திருந்திருக்கின்றது. 2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் “சர்வதேச வழக்குதொடுநர்கள், சர்வதேச நீதிபதிகளை” விசாரணையில் இணைத்துக் கொள்வது பற்றி பெயரளவிலேனும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அது நடைபெறவில்லை. அப்போதிருந்த மைத்திரி — ரணில் நல்லாட்சி இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணையை வழங்கியிருந்த போதிலும் கூட தீர்மானத்தில் ஏற்றுக் கொண்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவில்லை.



ஆனால் தற்போதைய தீர்மானத்தின் செயற்பாட்டுப் பந்தி 9இன் பிரகாரம், குற்றத்தின் பங்காளிகளான இந்த அரசையே, தான் இழைத்த குற்றங்களை விசாரிக்க கோரும் விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மக்களாகிய தமிழர்களுக்கு நீதிக்கான பொறுப்புக்கூறலை பொறுத்தவரையில் இந்த தீர்மானம் மிகவும் பலவீனமானது, வலுவற்றதாகும். குற்றவாளியான இலங்கை அரசை மீண்டும் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே இது அமைந்துள்ளது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

முன்னைய தீர்மானங்களில் இருந்த சர்வதேச விசாரணை, தற்போதைய தீர்மானத்தில் உள்ளடக்கப்படாமைக்கு தமிழ்த் தரப்பினர் அதற்கான பரப்புரைகளை உரிய முறையில் முன் வைக்காமையும் ஒரு காரணம். இருந்த போதிலும் இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுக்கக்கூடிய ஒரு அம்சம் ஒன்று புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் இவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படும் என்றே தெரிகின்றது.



## புதிய பொறிமுறை

இம்முறை தீர்மானத்திலுள்ள பலமான அம்சமாக போர்க் குற்றங்கள் குறித்த சாட்சியங்களைஆதாரங்களைச் சேகரித்து ஆவணப்படுத்தும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் முக்கியமானதாகும். இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுக்கப் போகும் விடயமாகவும் இதுவே இருக்கப்போகின்றது. இதற்காக ஐ.நா. உயர் ஸ்தானிகர் அலுவலகம் 12 பணியாளர்களைப் புதிதாக நியமிக்கவுள்ளது. சர்வதேச குற்றவியல் நீதித் துறையுடன் சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசகர்கள், புலனாய்வாளர்கள் உட்பட பலர் இதற்காக நியமிக்கப்படவுள்ளார்கள். சாட்சியங்களை ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை இவர்கள் மேற்பார்வையிடுவதுடன் அதற்கான இணைப்பாளர்களாகவும் கடமையாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. சாட்சியங்கள் ஆதாரங்களை சேகரிப்பது அவற்றை ஆவணப்படுத்துவது அவற்றை பகுப்பாய்வு செய்வது என்பன இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பணியாகும்.

இதன் மூலம் உடனடியாகவே இலங்கை சர்வதேசத்தின் கண்காணிப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கையை கண்காணித்து இலங்கை பற்றிய வாய்மொழி அறிக்கையை எதிர்வரும் செப்டம்பரிலும் எழுத்து மூல அறிக்கையை அடுத்த வருடம் பெப்ரவரியிலும் சமர்பிக்கும்படியும் அதையடுத்து மாற்றங்கள் முன்னேற்றங்கள் இல்லை என்றால் பொறுப்பு கூறல் தொடர்பாக அடுத்து எடுக்கப்பட வேண்டிய காத்திரமான நடவடிக்கைகளை அடுத்த வருடம் செப்ரெம்பரில் சிபாரிசு செய்யும்படியும் ஐநா மனித உரிமை ஆணைக்குழு தீர்மானம் ஐநா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தை கோரியுள்ளது.

## கண்காணிப்புக்குள் இலங்கை

ஜெனிவாவில் நாம் தோற்றுவிடவில்லை என சிங்கள மக்கள் முன்பாக அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கும் நிலையில் மனித உரிமைகள் பேரவை தமது கண்காணிப்பை ஆரம்பித்துவிட்டது. 12 புதிய பணியாளர்களை நியமிப்பதற்கு முன்னதா, தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டே தமது செயற்பாடுகளை மனித உரிமைகள் பேரவை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச கண்காணிப்புக்குள் இலங்கை வந்துவிட்டது என்பதுடன், போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்களை அவர்கள் நேரடியாகச் சேகரித்து ஆவணப்படுத்தி பகுப்பாய்வு செய்யப் போகின்றார்கள் என்பது எதிர்காலத்தில் பொறுப்புக் கூறலிலிருந்து இலங்கை தப்பித்துக் கொள்ள முடியாது என்பதையே உணர்த்துகின்றது.

இதனைவிட இலங்கை மீதான பிரேரணைக்கு 40க்கும் அதிகமான நாடுகள் இணை அனுசரணையை வழங்கியிருந்தன. இதில் பெரும்பாலான நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளல்ல. இலங்கையின் போக்கில் மாற்றம் ஏற்படாவிட்டால் எதிர்காலத்தில் வர்த்தக ரீதியான நெருக்கடிகளை இலங்கை எதிர்கொள்ள வேண்டி வரலாம் என இராஜதந்திரிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். அதேபோல முக்கிய இராணுவ அதிகாரிகள் மீது பயணத் தடைகள் வருவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. சில நாடுகளில் இவ்வாறான தடைகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. ஆக புதிய தீர்மானத்தின் மூலமாக இலங்கை மீதான பிடி இறுகியிருப்ப தாகவே தெரிகின்றது. முக்கியமான விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தா விட்டால் எதிர்காலத்தில் பல நெருக்கடிகளை இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதே யதார்த்தம்.



குறிப்பாக — பொறுப்புக் கூறல், நீதி விசாரணை, தண்டனை, நஷ்டஈடு, காணாமல் போனோர் அலுவலகம் சுயாதீனமாக செயற்படல், இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு, மாகாணசபை தேர்தல், பன்மைத்துவம் ஏற்பு ஆகியவை தொடர்பில் கோட்டாபய அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதனை அரசாங்கம் செய்யுமா? அல்லது தொடர்ந்தும் வீரவேசக் கதைகளைத் தான் பேசிக் கொண்டிருக்கப் போகின்றதா?

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- பார்த்தீபன் -**

ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சட்டவிரோதமானது என வெளிவிவகார அமைச்சர் தினேஸ்குணவர்த்தன தெரிவித்துள்ளார். இந்ததீர்மானம் இலங்கையின் உள்விவ காரங்களில் தலையிடும் முயற்சி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய தீர்மானத்திற்கு பேரவையின் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை என குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் முன்னைய அரசாங்கம் தீர்மானத்திற்கு இணை அனுசரனை வழங்கியதன் மூலம் நாட்டிற்கு துரோகமிழைத்ததுஎன தெரிவித்துள்ளார். உள்ளூர் பொறிமுறை மூலமே பொறுப்புக்கூறல் விவகாரத்திற்கு தீர்வு காணப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சர்வதேச கண்காணிப்பு வலையமைப்புக்குள் மீண்டும் இலங்கை வந்து விட்டது’ என்ற பட்டவர்த்தனமான உண்மையை அரசாங்கம் கண்ணை கட்டி கணக்கு வித்தை காட்டி சிங்கள மக்களிடம் மறைக்க முயல்கிறது. சிங்கள மக்களுக்கு இதை எடுத்து கூற, முன்னாள் நல்லிணக்க துறைசார் அமைச்சர் என்ற முறையில் நான் கடமைப்பட்டுள்ளேன். இலங்கையை கண்காணித்து இலங்கை பற்றிய வாய்மொழி அறிக்கையை எதிர்வரும் செப்டம்பர் அக்டோபரிலும் எழுத்து மூல அறிக்கையை அடுத்த வருடம் பெப்ரவரி மார்ச்சிலும் சமர்ப்பிக்கும்படியும் அதையடுத்து, இலங்கை திருந்தாவிட்டால் பொறுப்பு கூறல் தொடர்பாக அடுத்து எடுக்கப்பட வேண்டிய காத்திரமான நடவடிக்கைகளை அடுத்த வருடம் செப்டம்பர் அக்டோபரில் சிபாரிசு செய்யும்படியும் ஐநா மனித உரிமை ஆணைக்குழு தீர்மானம் ஐநா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தை கோரியுள்ளது என்பதை இலங்கை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச கவனத்தில் கொள்ள வேண்டும் என கொழும்பு மாவட்ட எம்பியுமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் திடீர் நகர்வுகள்

கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்



கொரோனா தொற்றுக்குப் பின்னர் கொழும்பில் இந்திய உயர்ஸ்தானிகராக பொறுப்பேற்ற கோபால் பாக்லே வடக்கு கிழக்கு மலையகம் என, இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புடைய பகுதிகளில் சுற்றிக் கொண்டு வந்திருக்கிறார்.

கொரோனா தொற்றுக்கு மத்தியில் தனி விமானத்தில் வந்திறங்கி சுயதனிமைப்படுத்தலில் இருந்த பின்னர் தான் கடந்த ஆண்டில் அவர் பணிகளைப் பொறுப்பேற்றிருந்தார்.

கொழும்பில் இறங்கி 10 மாதங்களுக்குப் பின்னரே அவர் வடக்கு கிழக்கை முதல் முறையாக எட்டிப் பார்த்திருக்கிறார். கொரோனா தொற்றுச் சூழல் அவரை சூழ்நிலைக் கைதியாக தடுத்து வைத்திருந்திருக்கலாம்.

அது போலவே தற்போதைய சூழ்நிலை அவரைத் தொடர்ந்தும் கொழும்புக்குள் முடங்கிக் கிடக்காமல் வெளியே வரும் நிர்ப்பந்தத்தையும் கொடுத்திருக்கலாம்.

திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி வழிபாடுகளில் தொடங்கி சேது அணைக்கு பூஜை விழிபாடுகளை மேற் கொண்ட அவர் யாழ்ப்பாணத்தில் அரசியல் தலைவர்கள் தொடக்கம், வர்த்தப் பிரமுகர்கள் வரை சந்திப்புகளை நடத்தியிருக்கிறார்.

கிழக்கிலும் அதுபோலவே சந்திப்புகளை நடத்தி எல்லா தரப்பினதும் கருத்துக்களை உள்வாங்கியிருக்கிறார். அதற்கு அப்பால் அவர் கரிசனை செலுத்திய விடயங்கள் பல. அவை அனைத்தும் இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்தும் திட்டங்கள் அல்லது இந்தியாவினால் உதவி அளிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் திட்டங்களாகும்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, யாழ்ப்பாண கலாசார நிலையம், திருகோணமலையில் சீனக் குடா எண்ணெய் களஞ்சிய தொகுதி, சம்பூரில் இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட திட்டமிடப்பட்டுள்ள சூரியகல மின்சக்தி திட்டத்துக் காக முன்மொழியப்பட்ட இடம் என்று இந்தியத் உயர்ஸ்தானிகர் பம்பரமாகச் சுற்றி பார்வையிட்டிருக்கிறார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை இலங்கை அரசு மீறிய பின்னர் இருதரப்பு உறவுகள் கேள்விக்குள்ளாகியிருந்தன.

அதற்குள் மேற்கு முனையத்தை அதானி குழுமத்துடன் சேர்ந்து அபிவிருத்தி செய்யவுள்ளதாக இலங்கை அரசு கட்டவிழ்த்து விட்ட கதையால் மீண்டும் முரண்பாடுகள் தோன்றின.

மேற்கு முனையத்தில் 85 சதவீத உரிமை இந்தியாவுக்கு கொடுக்கப்படும் என்று கூறிய அரசாங்கம்,

51 சதவீத உரிமையை மட்டும் கொடுக்க இப்போது முன்வந்திருப்பதாக கூறப்படுகிறது. இதுவும் கூட நிரந்தரமல்ல. மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க இன் னமும் இணக்கம் ஏற்படவில்லை என்று அமைச்சரவைப்பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல கூறியிருப்பது இதுவும் இந்தியாவின் கைக்கு கிட்டுமா அல்லது ஏமாற்றம் தான் மிஞ்சுமா என்ற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது. இதற்குள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றொரு பக்கத்தில் இந்திய நிறுவனத்திடம் உள்ள சீனக்குடா எண்ணெய் தாங்கிகள் விரைவில் இலங்கையின் வசமாகும் என்றும், அதற்கு இந்தியா இணங்கி விட் டதாகவும் புரளியைக் கிளப்பினார்.



அதனை மறுத்த இந்தியா அவ்வாறான எந்த இணக்கமும் ஏற்படவில்லை என்று கூறியிருந்தது.

இன்னொரு பக்கத்தில் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியா வலியுறுத்தும் போதெல்லாம் அதனை செய்ய முடியாது என்றும் அவ்வாறு உத்தரவிட இந்தியாவுக்கு அதிகாரம் இல்லை என்றும் கொதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர. இவையெல்லாம் அண்மைக் காலங்களில் இந்திய இலங்கை உறவுகளில் ஏற்பட்டுள்ள "விக்கல்கள்". அதைவிட இலங்கையில் இந்தியாவினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் அல்லது இந் தியாவினால் முன்மொழியப்பட்ட திட்டங்களை செயற்படுத்துவதில் நீண்ட இழுபறிகள் காணப்படுகின்றன. இது குறித்து இந்திய வெளி விவகார அமைச்சர் ஜெய்சங்கரின் பயணத்தின் போதும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் பயணத்தின் போதும் கலந்துரையாடப்பட்டது. ஆனாலும் அந்த தடைகள் அகன்ற பாடில்லை. இந்தியப் பிரதமர் மோடிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் அண்மையில் நடந்த தொலைபேசி உரையாடலின் போது கூட அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதில் உள்ள தடைகள் குறித்து பேசப்பட்டிருக்கிறது.



இந்த நிலையில் தான் இந்திய உயர்ஸ்தானிகரின் வடக்கு கிழக்கு பயணம் இடம் பெற்றிருக்கிறது. ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னரும் அது நடக்கும் போதும் வெளிநாட்டுத் தூதுவர்கள் வடக்கே படையெடுப்பது வழக்கம்.

இந்திய உயர்ஸ்தானிகரின் பயணமும் அவ்வாறானதொரு சூழலில் தான் இடம் பெற்றிருக்கிறது என்பது முதல் விடயம். ஜெனிவாவில் இந்தியாவின் நிலைப்பாடு இன்னமும் தெளிவாக வில்லை. நடுநிலை வகிக்கலாம் என்று எதிர்பார்ப்புகள் உள்ள நிலையில் "அங்கும் இங்கும்" இந்தியாவை அசைப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன.

இத்தகைய நிலையில் அவர் வடக்கு கிழக்கில் தமிழ்க் கட்சிகளை மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்திருக்கிறார்.

எனினும் இந்திய உயர்ஸ்தானிகரின் பயணம் நடந்த காலகட்டங்களில் பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போதும் அவர் அவ்வாறான இடங்களை தவிர்த்துக் கொண்டிருந்தார் என்பது கவனிக்கத் தக்கது. இந்திய உயர்ஸ்தானிகரின் கவனத்துக்குரிய முக்கியமான விடயமாக இருந்தது இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்கள் தான். ஏனென்றால் அந்த அபிவிருத்தி திட்டங்கள் பல கேள்விக்குறியாக உள்ளன. இந்தியப் பிரதமரின் பயணத்தின் போது தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்க இணக்கம் காணப்பட்டது. அதற்கு அப்பால் அந்த முயற்சிகள் எதுவும் முன்னெடுக்கப் படவில்லை. அண்மையில் காரைக்கால் காங்கேசன்துறை கப்பல் சேவை பற்றி பேசப்பட்டது. அதற்கான புரிந்துணர்வு உடன்பாடும் எட்டப்பட்டி ருக்கிறது. அதன் நிலையும் இன்னமும் கேள்விக்கு ரியாகவே உள்ளது.

காங்கேசன்துறை துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்கு இந்தியா உதவிகளை வழங்க முன் வந்த போதும் இலங்கை அரசு இழுத்தடிக்கிறது. இந்தியாவின் முயற்சியினால் சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப்பட்ட பலாலி விமான நிலையம் திறக்கப்பட்டு சென்னையில் இருந்து சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொரோனாவினால் மூடப்பட்ட பலாலி விமான நிலையத்தை அப்படியே மூடி விடவே அரசாங்கம் விரும்புகிறது. இந்தியா அதனை திறக்க அழுத்தம் கொடுத்து வருகிறது. கப்பல் மற்றும் விமான சேவைகள் ஊடாக வடக்கிற்கும் இந்தியாவுக்கும் இடையில் தொடர்புகள் வலுப்படுவதை இலங்கையின் தற்போதைய அரசாங்கம் விரும்பவில்லை.

ஆனாலும் இந்தியாவின் அழுத்தங்களால் இந்த திட்டங்களை முற்றாக நிராகரிக்க முடியாமலும் இருக்கிறது. சம்பூரில் சூரிய மின்சக்தி திட்டத்தை செயற்படுத்த இந்தியா இணங்கியது. அதற்கான பணிகளும் இன்னும் தொடங்கப்படவில்லை.

இந்தநிலையில் இந்த மின் நிலையத்துக்காக முன் மொழியப்பட்ட இடத்தை இந்திய உயர்ஸ்தா னிகர் பார்வையிட்டிருக்கிறார். இலங்கையினால் மீளபெறப்படவுள்ளதாக அமைச்சர் கம்மன்பில அறிவித்த சீனக்குடா எண்ணெய் தாங்கி தொகுதி அமைந்துள்ள பகுதியில் லூப் எண்ணெய் தாங்கி வசதிகளை இந்திய உயர்ஸ்தானிகர் திறந்து வைத்திருக்கிறார்.

இது சீனக்குடாவில் இந்திய நிறுவனம் தனது அதிகாரத்தை வலுப்படுத்துகிறது என்பதன் அடையாளம்.

ஆக வடக்கு கிழக்கில் இந்தியா தனது அபிவி ருத்தி செயற்பாடுகள், திட்டங்களை விரைவுபடுத்தும் எண்ணத்தில் இருப்பதாக தெரிகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் நெருடல்கள் உள்ள போதும் அபிவிருத்திப் பங்காளனாக இருக்கவே இந்தியா விரும்புகிறது.

அதேவேளை திருகோணமலையில் இலங்கைக் கடற்படையின் பயிற்சிகளுக்குத் தேவையான 22 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களையும் இந்திய உயர்ஸ்தானிகர் வழங்கியிருக்கிறார். இது இலங்கையில் பாதுகாப்பு ரீதியான கடப்பாட்டையும் அபிவிருத்திக் கடப்பாட்டையும் விட்டு ஒதுங்கும் நிலையில் இந்தியா இல்லை என்பதை காட்டியிருக்கிறது. சீனாவின் பக்கம் ஓடி ஒதுங்க முயன்றாலும் இந்தியா அதனை தடுப்பதற்கான மாற்று வழிகளை கையாள முனைகிறது.

அதற்கான ஒரு கருவியாக வடக்கு கிழக்கையும் தமிழர்களையும் இந்தியா பயன்படுத்திக் கொள்ளவும் தயங்காது என்றே தெரிகிறது.

எந்தச் செய்தியையும்
முந்தித் தரும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
28வது ஆண்டு விழா
“இலக்கியப் பெருவிழா”
விரைவில்! விபரங்கள்

# உத்தேச ஜெனிவாத் தீர்மானம்:- தமிழ்மக்களுக்கு ஒரு வெற்றியா?




கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
நிலாந்தன்

ஜெனிவாத் தீர்மானத்துக்குரிய உத்தேச வரைபின் இறுதி வடிவம் வெளிவந்து விட்டது. இந்த இறுதி வடிவத்தை உருவாக்குவதற்காக தாமே அதிகம் உழைத்ததாக சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் உரிமை கோரியுள்ளன. அதே சமயம் கடந்த ஜனவரி 15ஆம் திகதி தாம் இரண்டு கட்சிகளோடு இணைந்து அனுப்பிய பொதுக் கோரிக்கையில் கேட்கப்பட்ட சில விடயங்களை இந்த வரைபுக்கு ஒரு வியாக்கியானம் வழங்கியிருக்கிறது.

கூட்டமைப்பும் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் கூறுவதன்படி இந்த வரைபில் முதலாவதாக தமிழ் என்ற வார்த்தையை இணைக்கப் பாடுபட்டமை இரண்டாவதாக இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13வது திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டமை மூன்றாவதாக வடக்கிலும் கிழக்கிலும் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று கேட்டிருப்பது நாலாவதாக போர்க்குற்ற விசாரணைகளுக்கு உதவும் விதத்தில் சான்றுகளையும் சாட்சியங்களையும் சேகரிப்பதற்கான ஏதோ ஒரு கட்டமைப்பை பரிந்துரைத்திருப்பது போன்றனவே தமிழ் மக்களுக்கு சாதகமான முக்கிய அடைவுகள் என்று சுட்டிக் காட்டப்படுகின்றன.

ஆனால் கடந்த ஜனவரி மாதம் மூன்று கட்சிகளும் இணைந்து அனுப்பிய ஆவணத்தில் கூறப்பட்டிருந்த விடயங்கள் இவை தானா?

அந்த ஆவணத்தின் இதயமான பகுதி பொறுப்புக்கூறல் பற்றியது. பொறுப்புக் கூறலை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று மூன்று கட்சிகளும் கேட்டிருந்தன. அது தொடர்பான ஏதும் குறிப்புகள் தீர்மான வரைபில் உண்டா?

ட்ரிபிள். ஐ. எம் என்றழைக்கப்படும் ஒரு தகவல் திரட்டும் பொறிமுறை பற்றி அந்த பொது ஆவணத்தில் கேட்கப்பட்டிருந்தது. இப்பொழுது உத்தேச தீர்மான வரைவு குறிப்பிடப் பட்டிருக்கும் அந்த பொறிமுறை எப்படிப்பட்டது? அது ஐநா மனித உரிமைகள் பேரவையின் கீழ் இயங்குமா? சிரியாவுக்கான மேற்படி பொறிமுறை ஐ.நா பொதுச் சபைக்குக் கீழேயே உருவாக்கப்பட்டது.

மூன்று கட்சிகளும் இணைந்து அனுப்பிய பொது ஆவணத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி எதுவும் கூற வில்லை. அது தொடர்பில் மேலும் இரு கடிதங்கள் எழுத வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு கடிதங்களை எழுதுவதற்கு கூட்டமைப்பு உடன்படவில்லை. ஏனெனில் ஜெனிவா தீர்மானத்துக்குரிய உத்தேச வரைபை உருவாக்கும் பொழுது நிலைமைகளை குழப்பக் கூடாது என்று ஒரு காரணம் கூறப்பட்டது.

அது மட்டுமல்ல ஐநா தீர்மானத்திற்குரிய பூச்சிய வரைபு தெளிவாகிய பொழுது அதற்கு எதிராக மூன்று கட்சிகளையும் எதிர் வினையாற்றுமாறு சிவில் சமூக பிரதிநிதிகள் கேட்டிருந்தார்கள். ஆனால் கூட்டமைப்பு அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஐநா தீர்மானத்துக்குரிய உத்தேச வரைபை உருவாக்கும் ஒரு காலகட்டத்தில் அதை உருவாக்கும் கருக்குழு நாடுகளோடு ஒரு புறம் நெருங்கி ஒத்துழைத்துக் கொண்டு இன்னொருபுறம் பூச்சிய வரைபிற்கு எதிராக கருத்து தெரிவிப்பதற்கு அக்கட்சி தயாராக இருக்கவில்லை.

அது காரணமாகவே கொழும்பில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை அமைப்பின் சார்பில் ஒரு ஊடக மாநாட்டில் ஏனைய இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கு பற்றவில்லை என்பது வேறுகதை. அதை தனியாக பார்க்கலாம். ஆனால் அதில் பங்கு பற்றாமைக்கு கூட்டமைப்பு மேற்கண்ட காரணத்தையே மறைமுகமாக தெரிவித்தது.

அதே சமயம் ஜனவரி மாதம் மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைத் ஒரு பொது ஆவணத்தை தயாரித்த சிவில் சமூக அனுசரணையாளர்கள் மறுபடியும் மூன்று கட்சிகளையும் அணுகி பூச்சிய வரைபிற்கு எதிர்வினையாற்றுமாறு கேட்டிருந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளுக்கும் கூட்டமைப்பு உடன்படவில்லை. அப்படி ஒரு பின்னணியில் ஏனைய இரண்டு கட்சிகளையும் இணைத்து ஒரு பொது ஆவணத்தை தயாரிப்பதில் அனுசரனையாளர்கள் ஈடுபட்டார்கள். எனினும் 13வது திருத்தம் தொடர்பில் விக்னேஸ்வரனுக்கும் கஜேந்திரகுமாருக்கும் இடையே ஒரு உடன்பாட்டை எட்ட முடியவில்லை.

இது காரணமாக அந்த ஆவணத்தில் இரண்டு கட்சிகளையும் இணைக்க முடியாத சிவில் சமூக பிரதிநிதிகள் முடிவில் அந்த ஆணவத்தை தமிழ் சிவில் சமூக அமையம் என்ற அமைப்பின் பெயரால் வெளியிட்டார்கள். இவ்வாறு வரவிருக்கும் ஐநா தீர்மானம் தொடர்பில் தமிழ் தேசிய நிலைப்பாட்டை கொண்ட மூன்று கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவதில் சிவில் சமூகங்கள் வெற்றி பெற முடியவில்லை.

இவ்வாறான ஒரு பின்னணியில் தான் சம்பந்தரும் சுமந்திரனும் உத்தேச ஜெனிவா தீர்மான வரைபில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடையங்கள் தொடர்பில் திருப்தி தெரிவித்திருப்பதோடு அது தொடர்பாக வியாக்கியானங்களையும் வழங்கி வருகிறார்கள். ஜெனிவா தீர்மானத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ் மக்களுக்கு கூறி வருகிறார்கள். அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் என்றும் அவ்வாறு தோற்கடிப்பது தமிழ் தரப்புக்கு ஒரு பெரிய வெற்றியாக இருக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் இங்கு பிரச்சினை என்னவென்றால் அப்படி ஒரு வெற்றியைப் பெறுவதற்காக என்னென்ன வி'யங்களை தியாகம் செய்ய வேண்டி இருக்கின்றது என்பது தான்.

ஏனெனில் அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டுமென்றால் அதாவது தீர்மானத்தை வெற்றி பெற வைக்க வேண்டுமென்றால் அந்த தீர்மானம் வெற்றி பெற தக்க விதத்தில் வடிவமைக்கப்பட வேண்டும் ஒரு தீர்மானத்தை வெற்றி பெறத் தக்கதாக வரைவது என்பது அதன் பிரயோக வடிவத்தில் உறுப்பு நாடுகளை திருப்திப்படுத்தும் விதத்தில் அதை உருவாக்குவது தான். அப்படி என்றால் ஐநா மனித உரிமைகள் பேரவையில் பெரும்பாலன உறுப்பு நாடுகளை திருப்திப்படுத்தும் விதத்தில் தீர்மான வரைபை மேலும் நீர்த்துப் போகச் செய்தால் தான் உண்டு.

அதை தான் பிரித்தானியா தலைமையிலான கருக்குழு நாடுகள் கடந்த வாரங்களில் செய்து வந்தன. அதில் ஒரு பகுதியாகவே இந்தியாவை வென்றெடுப்பதற்காக 13வது திருத்தம் இணைக்கப்பட்டிருக்கிறது. 13வது திருத்தத்தை எந்த அடிப்படையில் இணைத்தார்கள்? கூட்டமைப்பும் லண்டனை மையமாகக் கொண்ட புலம்பெயர்ந்த தமிழ் அமைப்பு ஒன்றும் கூறுவது போல உத்தேச தீர்மானம் விரைவில் 13வது திருத்தம் இணைக்கப்பட்டமை ஒரு அடைவா? அதை இணைத்து புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் மற்றும் கூட்டமைப்பின் தூண்டுதலாலா? அது இந்தியாவை திருப்திப்படுத்துவதாகவா? அல்லது தமிழ் மக்களுக்காகவா?

மேலும் 13வது திருத்தம் என்பது 33 ஆண்டுகளுக்கு முன் இந்திய — இலங்கை உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவத்திலா? அல்லது இப்பொழுதுள்ள நீர்த்துப் போன வடிவத்திலா? என்ற கேள்வியும் இங்கு முக்கியம்.

கடந்த 33 ஆண்டுகளாக 13வது திருத்தத்தை அதன் பெற்றோரில் ஒருவரான ஜெயவர்த்தனாவில் தொடங்கி இப்போதிருக்கும் கோட்டாபய வரையிலும் எல்லா ஜனாதிபதிகளும் படிப்படியாக சிறுகச் சிறுகச் சிதைத்து வந்தார்கள். இப்பொழுது பிரயோகத்தில் இருப்பது எழுத்து வடிவத்தில் உள்ள 13வது திருத்தம் அல்ல. அதன் சிதைக்கப்பட்ட ஒரு கோறையான வடிவம் தான். அது சிதைக்கப்பட்ட பொழுது அதை இந்தியா தடுக்கவில்லை.

13வது திருத்தத்தில் அதாவது இந்தியா இலங்கை உடன்படிக்கையில் தமிழ் மக்கள் சார்பாக இந்தியாவே கைச்சாத்திட்டது. அப்படி என்றால் இந்தியா தான் அதற்கு பொறுப்பு. அக்கூட்டுப் பொறுப்பை இந்தியாவும் நிறைவேற்றவில்லை. இலங்கையும் நிறைவேற்றவில்லை. இந்நிலையில் இரண்டு பெற்றோராலும் கைவிடப்பட்ட ஒரு அனாதைக் குழந்தையை இது குழந்தை அல்ல முண்டம் அதனை தமிழ் மக்களின் தலையில் கட்டி விட ஐநா வும் முயற்சிக்கின்றதா? அதற்கு தமிழ் மக்கள் மத்தியில் பெரிய ஆணையைப் பெற்ற கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் உடந்தையா? உத்தேச தீர்மானம் வரைபு இதற்கு முந்திய தீர்மானங்களின் தொடர்ச்சி தான். இதற்கு முன்வந்த தீர்மானங்கள் நிலைமாறு கால நீதியை பரிந்துரைக்கின்றன. (20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# மேலும் மேலும் பலவீனமடையும் தமிழர் அரசியல்

தமிழர் அரசியல் அதிகம் அதிகம் பலவீனமாகிக் கொண்டிருக்கின்றது. இதற்கு வெளியிலிருப்பவர்கள் எவரும் காரணமல்ல. மாறாக தமிழர் அரசியல் தமிழர்களாலேயே பலவீனப்படுத்தப்படுகின்றது. அண்மையில் போராட்டம் என்னும் பெயரில் மேற்கொள்ளப்பட்ட சில நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் விவாதங்களும் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை என்னும் சுலோகத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட ஜனநாயக பேரணியில் மக்கள் தன்னியல்பாகவே பெருமளவில் திரண்டிருந்தனர். 2009இற்கு பின்னர் இடம் பெற்ற மிக முக்கியமானதொரு தன்னியல்பான எழுச்சியாக பொத்துவில் தொடங்கி பொலிகண்டியை குறிப்பிடலாம். ஆனால் அதன் பின்னர் இடம் பெற்ற சம்பவங்கள் மக்களின் தன்னியல்பான எழுச்சியை மலினப்படுத்துவதற்கே பயன்பட்டிருக்கின்றது.

அண்மைக் காலமாக இடம் பெற்ற அனைத்து ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத் தொடரை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இலங்கையின் மீது கொண்டு வரப்படவுள்ள புதிய பிரேரணையின் உள்ளடக்கம் தொடர்பிலேயே அனைவரும் கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர். ஆரம்பத்தில் புலம்பெயர் அமைப்புக்களால் ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடல்கள், பின்னர் வடக்கு கிழக்கிலுள்ள பிரதான தமிழ் கட்சிகளுக்கிடையிலான சந்திப்பாக மாறியது. அல்லது மாற்றப்பட்டது. இந்த பின்புலத்தில் தான் தமிழ்த்தேசியத்தை பெயரில் வைத்திருக்கும் பிரதான மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கும் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தனர். இதில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உட்பட சில விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் எனது முன்னைய பத்திகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன்.

அதனால் இந்த இடத்தில் மீளவும் அவற்றை குறிப்பிடுவதை தவிர்க்கின்றேன். மூன்று கட்சிகளின் கடிதம் அனுப்பப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னரே இந்தக் கலந்துயையாடல்களை ஆரம்பித்த பிரதான புலம்பெயர் அமைப்புக்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விக்கினேஸ்வரன் ஆகியோரது கையெழுத்துக்களுடன் தங்களது பரிந்துரைகள் அடங்கிய ஆவணத்தை பேரவையின் ஆணையாளருக்கும் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் அனுப்பி விட்டனர். உண்மையில் மூன்று கட்சிகள் இணைந்து அனுப்பிய கடிதத்திற்கும் புலம்பெயர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து அனுப்பிய ஆவணத்திற்குமிடையில் பெரிய வேறுபாடுகள் எவையுமில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் பேரவையின் ஆணையாளரின் அறிக்கை வெளியாகியது. புலம்பெயர் அமைப்புக்கள் மூன்று கட்சிகள் ஒன்றாக முன் வைத்த விடயங்கள் அனைத்தும் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. காகமிருக்க பனம் பழம் விழுந்த கதையாக தங்களின் அறிக்கைகளால் தான் ஆணையாளர் இவ்வாறானதொரு காட்டமான அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார் என்று சிலர் கூறிக்கொள்வதற்கு வாய்ப்பாகியது.

ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கும் தனியார் தொலைகாட்சி ஒன்றிற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போது குறித்த அறிக்கை ஒரு மாதத்திற்கு முன்பதாகவே மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தினால் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாக சுமந்திரன் தெரிவித்திருந்தார். அவ்வாறாயின் பனம்பழம் விழுந்ததற்கு நிச்சயமாக காகம் காரணமல்ல.

உண்மையில் ஒப்பீட்டடிப்படையில் பேரவையின் உயர்ஸ்தானிகரின் அறிக்கை காட்டமான ஒன்று தான். அதில்



முரண்பட ஒன்றுமில்லை. சில குறிப்பிட்ட புலம்பெயர் அமைப்புக்கள் இந்த விடயத்தில் தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றன. அவர்கள் ஒரு வேளை இதற்கு தாங்களும் ஒரு காரணமென்று கூறக்கூடும். அவ்வாறு கூறுவதற்கான உரிமை அவர்களுக்கிருப்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இங்கு பலரும் கவனிக்காத ஒரு பக்கமுண்டு. அதாவது பேரவையின் உயர்ஸ்தானிகர் மிஷல் பேச்லெட் தனிப்பட்ட பின்னணி. மிஷல், தென்னமரிக்க நாடான சிலி நாட்டின் முன்னைநாள் ஜனாதிபதி. சிலியின் சர்வாதிகாரியான ஒகஸ்டோ பினோசேவின் ஆட்சியால் பாதிக்கப்பட்ட ஒருவர். அவரது தந்தை கொல்லப்பட்டார். அவரும் அவரது தாயாரும் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்தனர். இவ்வாறான தனிப்பட்ட அனுபவங்களை கொண்டிருக்கும் ஒருவரிடம் மனித உரிமைகள் மீதான நாட்டம் இயல்பாகவே இருக்க வாய்ப்புண்டு. அவரது தனிப்பட்ட ஈடுபாடும் அவரது அறிக்கையில் செல்வாக்கு செலுத்தியிருக்க நிச்சயம் வாய்ப்புண்டு. திருகோணமலை மூலோபாய கற்கை நிலையத்திற்காக தென்னமரிக்க அரசியல் ஆய்வாளரான ரொன் ரெட்நூரை நேர் கண்ட போது இந்த விடயத்தை அவரும் ஆமோதித்திருந்தார்.

தவிர பேரவையின் உயர்ஸ்தானிகர் என்னும் வகையில் பதினொரு வருட கால அனுபவங்களுக்கு பின்னர் எவ்வாறான பரிந்துரைகளை முன் வைக்க முடியுமோ அதனைத் தான் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்துமே உயர்ஸ்தானிகரின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தன.

தமிழர் ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தவறில்லை. ஆனால் அது மற்றவர்களால் பரிகசிக்கப்படுவதாக இருக்கக் கூடாது. பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை தொடர்பில் ராஜதந்திர வட்டாரத்திலும் ஒரு அவதானம் இருந்தது. அமெரிக்கத் தூதுவர் கூட அது தொடர்பில் தனது கவனத்தை செலுத்தியிருந்தார். ஆனால் அதன் பின்னர் இடம் பெற்ற செயற்பாடுகள் மக்களின் தன்னியல்பான எழுச்சியை மழுங்கடிக்கும் காரியங்களாகவே இருந்தன. பொத்துவில் தொடங்கி பொலிகண்டியை பரிகசிக்கும் வகையிலேயே அனைத்தும் இடம் பெற்றது. இதற்கு பொத்துவில் தொடங்கி பொலிகண்டியின் ஏற்பாட்டாளர்களாக தங்களை காண்பித்துக் கொண்டவர்கள் கூட துணை போனமை தான் விந்தையானது.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டிக்கு பின்னர் தான் இணைத் தலைமை நாடுகளின் பூச்சிய வரைபு வெளியாகியிருந்தது. அதில் தமிழர் எதிர்பார்த்த பல விடயங்கள் இருக்கவில்லை. அதன் பின்னர் இரண்டாவது வரைபு வெளியாகியது. அதிலும் பெரியளவில் மாற்றங்கள் இடம் பெற்றிருக்கவில்லை. இந்த விடயங்களை தமிழர் தரப்புக்கள் தெளிவாக புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் உண்ணாவிரதம் பேரணிகளை மேற் கொண்டால் பிரேரணை வரைபில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்னும் அடிப்படையிலேயே சில தமிழ் அமைப்புக்கள் செயற்பட்டிருந்தன. இதன் விளைவாகவே பிரித்தானியாவில் ஒரு பெண்மணி உணவு தவிர்ப்பின் மூலம் பிரித்தானிய பேரரசிற்கு அழுத்தங்களை கொடுக்கப் போவதாகக் கூறி தன்னை வெளிப்படுத்தினார். அவருக்கு ஆதரவாக வடக்கு கிழக்கில் சில அடையாள உணவு தவிர்ப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தேர்தல் காலமென்பதால் தமிழ் நாட்டிலுள்ள அரசியல்வாதிகளும் இதற்கு ஆதரவாக குரலெழுப்பியிருந்தனர். சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களின் ஏற்பாட்டில் பிறிதொரு பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்பதே இவ்வாறான அனைத்து செயற்பாடுகளினதும் கோசமாக இருந்தது.

இன்று உண்ணாவிரதம் இருந்தவர் தொடர்பிலும் அதன் அரசியல் தொடர்பிலும் இடம்பெறும் சமூக ஊடக உரையாடல்கள், தமிழர் அரசியலின் மலினமான பக்கத்திற்கான சாட்சிகளாக ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. அவரது தனிப்பட்ட வாழ்விலிருந்து அனைத்தும் பேசுபொருளாக்கப்பட்டிருக்கின்றது. பிரித்தானிய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியினடிப்படையில்தான் உணவு தவிர்ப்பு கைவிடப்பட்டதாக ஒரு சிலரும் இல்லை அது பொய்யென்று இன்னொரு தரப்பும் வாதம் புரிகின்றது. ஆனால் இவை அனைத்தும் எதற்காக செய்யப்பட்டதாக கூறப்பட்டதோ அந்த விடயங்கள் எவையுமே புதிய பிரேரணையில் உள்வாங்கப்படவில்லை. அதனை மேற்குலகம் கண்டு கொள்ளவுமில்லை. அவ்வாறாயின் இந்த செயற்பாடுகளின் ஒட்டுமொத்த பயன் என்ன? இப்போதும் சிலர் உண்ணாவிரதமிருப்பதாக கூறிக் கொள்கின்றனர். அதன் பொருள் என்ன? எதற்காக இந்த செயற்பாடுகள்? சுயநல பிரச்சாரங்களுக்காகவா?

முதலில் தமிழர் தரப்பு ஒன்றை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். தாயின் பசி, தங்கையின் பசி இவற்றுக்காகவெல்லாம் ஒரு வல்லரசு தனது கொள்கை நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளாது. (ஒருவர் உணவருந்தாமல் இருப்பதால் வல்லரசுகள் கொள்கைகளை மாற்றிக் கொள்ளுமென்றால் ஒவ்வொரு நாடுகளிலும் சிலர் உண்ணாமல் இருப்பதால் அனைத்தையும் சாதித்துக் கொள்ளலாமே! உண்மையில் உணவு தவிர்ப்பு என்பது ஒருவரது தனிப்பட்ட முடிவாகும். அது ஒரு சமூகத்தின் கூட்டு முடிவல்ல. சமூக கூட்டு முடிவுகள்தான் ஓரளவாவது கவனஈர்ப்பை ஏற்படுத்தக் கூடியவை.

ஒரு பெண்மணி உண்ணாவிரதமிருந்ததாக கூறியே அனைத்து விவாதங்களும் நடக்கின்றன, அவ்வாறாயின் அவரை பின்பற்றி புலம்பெயர் நாடுகள் தோறும் ஏன் பல்லாயிரக் கணக்கானவர்கள் உணவு தவிர்ப்பில் ஈடுபடவில்லை? ஒரு வேளை அவ்வாறு நிகழ்ந்திருந்தால் அது ஒரு கூட்டு உணர்வின் வெளிப்பாடாக நோக்கப்பட்டிருக்கும். உண்மையில் இவ்வாறான தனிநபர் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படக் கூடாது.

அரசியல் ஆய்வுகள் என்னும் பெயரில் இவைகள் ஊக்குவிக்கப்படக் கூடாது.

**கட்டுரையாளர்:**
**தாயகத்தில் இருந்து**
**– யசீந்திரா –**



இவ்வாறான செயற்பாடுகளில் ஒருவர் உயிரிழந்தால் ஒரு குடும்பம் ஒருவரை இழக்குமேயன்றி வேறு எதுவும் நடக்காது. தமிழ் நாட்டில் முத்துக்குமாரு செங்கொடி என சிலர் தங்களுக்கு தாங்களே தீமூட்டி இறந்தனர். இதனை சிலர் தீக்குளிப்பு என போற்றினர். இவ்வாறு சிலர் இறந்து போனதால் இந்திய வெளிவிவகாரக் கொள்கை மாறியதா?

உண்மையில் இவற்றை புதுடில்லி கண்டு கொள்ளவேயில்லை. ஒரு ஏழைத் தாய் தனது மகனை இழந்து போனதைத் தவிர வேறு எதுவும் நடந்து விடவில்லை. இது போன்ற விடயங்களை ஊக்குவிப்பதும் போற்றுவதும் ஒரு அரசியல் வங்குரோத்து நிலைமையாகும். எனவே உண்ணாவிரதமென்னும் பெயரில் மற்றவர்களை இறக்குமாறு தூண்டுவது நெருப்பில் வெந்து சாகுமாறு மற்றவர்களை ஊக்குவிப்பது மிகவும் மோசமானதொரு சமூக விரோத செயலாகும்.

விடயங்களை தெளிவாக விளங்கிக் கொண்டே எந்தவொரு காரியத்திலும் ஈடுபட வேண்டும். மேற்குலக தலையீடுகளின் இலக்கு, தாராளவாத உலக ஒழுங்குடன் ஒத்துழைக்க மறுக்கும் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதும் அதன் ஊடாக அரசாங்கத்தை ஒரு வழிக்கு கொண்டு வருதுமேயன்றி இலங்கை அரசை பலவீனப்படுத்துவதல்ல.

இலங்கையின் மீதான அழுத்தங்களை இந்த அடிப்படையில் தான் விளங்கிக் கொள்ள வேண்டும். அரசாங்கம் தான் இங்கு இலக்கேயன்றி இலங்கை அரசல்ல. மேற்குலகின் அதிகபட்ச இலக்கு என்பது ஒரு ஆட்சி மாற்றத்திலேயே முடிவுறும்.

அதே வேளை அவ்வாறான ஆட்சி மாற்றமொன்று ஏற்படுகின்ற போது அதன் பின்னர் வருகின்ற புதிய அரசாங்கத்தின் மீதான அதிக நெருக்கடிகளை கொடுக்கும் வகையிலும் அவர்களது அழுத்தங்கள் இருக்காது. இதனை விளங்கொள்ளாமல் தமிழர் தரப்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இறுதியில் தமிழர் அரசியலை மற்றவர்கள் நகைச்சுவையாக நோக்கும் நிலைமையையே ஏற்படுத்தும்.

ஒரு ஆங்கில பழமொழியுண்டு. அதாவது அளவுக்கதிகமான சமையல்காரர்கள் சேர்ந்து உணவை பழுதாக்கினர். தற்போது தமிழர் அரசியலில் இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. மேய்ப்பர்கள் அதிகரித்ததால் ஆடுகள் போகுமிடத்தை தவறவிட்டுக் கொண்டேயிருக்கின்றன. தமிழர் அரசியல் மேலும் மேலும் பலவீனமடைந்து செல்கின்றது.

# ஐ.நா.வில் பிரேரணை நிறைவேற்றினால் வெளிநாட்டுப் படைகள் பிரசன்னம்?

- பிரேரணை மீது இலங்கை வாக்கெடுப்பைக் கோர வேண்டும்
- தமிழ் மக்களின் விடயங்கள் துருப்புச் சீட்டாக மாற்றப்பட்டுள்ளது
- சீன எதிர்ப்புக்காக இலங்கையைப் பயன்படுத்துகிறது மேற்குலம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்தினை முன்னேற்றுதல் என்னும் தொனிப்பொருளிலான பிரித்தானிய தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் கூட்டிணைந்து முன் வைத்துள்ள பிரேரணை நிறைவேற்றப்படுமாயின் வெளிநாட்டு படைகள் பிரசன்னமாகலாம் இலங்கையில் தங்கு தடையின்றி பிரசன்னமாகலாம் என்று **ஐ.நாவுக்கான(ஜெனிவா) முன்னாள் வதிவிடப்பிரதிநிதி தமரா குணநாயகம்** தெரிவித்தார்.

நிறைவேற்றப்படும் பிரேரணை தமிழ் மக்களின் விடயங்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கானது என்று பிம்பப்படுத்தப்பட்டாலும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இந்தியாவுடன் இணைந்து இலங்கையின் கேந்திர ஸ்தானத்தினை தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி பூகோள ரீதியான சீன எதிர்ப்பினை முன்னெடுப்பதே இலக்காகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம் இலங்கை அரசாங்கம் பிரேரணையை நிராகரிப்பதாக தொடர்ச்சியாக கூறி வருகின்றது. உண்மையில் ஐ.நாமனித உரிமைகள் பேரவையில் அப்பிரேரணை வெளியிட்டு அறிவிக்கப்பட்டதும் இலங்கையின் சார்பில் உறுப்புரிமை கொண்ட நாடொன்று வாக்கெடுப்பினைக் கோர வேண்டும். அவ்வாறு கோராது நிராகரிப்பதாக பூச்சாண்டி காண்பித்துக் கொண்டிருப்பதால் எவ்விதமான பயனுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையின் உள்ளடக்கம் மற்றும் அப்பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் ஏற்படவுள்ள அடுத்தகட்ட விடயங்கள் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் 1987ஆம் ஆண்டு ஜனநாயக மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்ட தருணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகளே கோரப்பட்டிருந்தன. ஆனால் இந்திய விமானப்படைகள் உலருணவுப் பொருட்களை வடபகுதியின் வான்பரப்பில் பறந்து வழங்கியிருந்தன.

அதன் பின்னர் ஓரிரு மாதங்களுக்குள் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இந்திய அமைதிகாக்கும் படைகள் வரவழைக்கப்பட்டன.

இந்திய அமைதிகாக்கும் படைகள் வடபகுதிக்கு வந்த வேளையில் அங்கிருந்த நிலைமைகளை அனைவரும் அறிவர். விடுதலைப்புலிகள் கூட அமைதிகாக்கும் படைகளை எதிர்த்திருந்தனர் என்றால் நிலைமைகளை அனைவரும் புரிந்து கொண்டிருந்தனர் என்பது தான் அர்த்தமாகும்.

இந்த நிலையில் தற்போதும் அவ்விதமான நிலைமையொன்றை ஏற்படுத்தவே முயற்சிக்கப்படுகின்றது. குறிப்பாக இலங்கையின் கேந்திர ஸ்தானத்தினை அடிப்படையாக வைத்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கையின் முழுப்பகுதியையும் தங்கு தடைகளின் தமது படைத்தரப்புக்கள் உள்ளிட்ட சுயநலன்களுக்கு பயன்படுத்தவே அதிகளவில் ஈடுபாட்டைக் கொண்டுள்ளன.

அத்துடன் அமெரிக்காவின் பூகோள சீன எதிர்ப்பின் ஒரு அங்கமாக இந்து — பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னத்தினை கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவை முன்னிலைப்படுத்தி இலங்கையைப் பயன்படுத்தவே விளைகின்றன. இதற்காகவே அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் உள்ள நான்கு நாடுகளின் கூட்டான குவாட் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மாலைதீவு இலங்கை இந்தியா பாதுகாப்பு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக அமெரிக்கா தனது படைகள் இலங்கையின் விமான நிலையங்கள் துறைமுகங்களை சுதந்திரமாக பயன்படுத்துவதற்கே முயற்சி



கட்டுரையாளர்: தமரா குணநாயகம்

களை மேற் கொண்டுள்ளது. ஏற்கனவே 2017இல் எக்ஸா உடன்படிக்கையை கைச்சாத்திட்டதன் மூலமாக கணிசமான அளவில் இலங்கையில் பாதுகாப்பு படைகள் கூட்டுப்பயிற்சிகளையும் திறந்த பயணங்களையும் மேற்கொள்கின் றன. இந்த நிலைமையை மேலும் மேம்படுத்தவே எம்.சி.சி மற்றும் சோபா ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அமெரிக்க முனைந்து வருகின்றது.

தற்போதைய நிலையில் எம்.சி.சி.ஒப்பந்தம் நிறுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும் திரைமறைவில் தனியார் மயப்படுத்தலின் ஊடாக வளங்கள் அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்களின் பின்னணியுடன் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன. இது நாளடைவில் அமெரிக்காவின் செல்வாக்கிற்கு முழுமையாகச் சென்றுவிடும் நிலையே உள்ளது.

இந்நிலையில் *சோபா* ஒப்பந்தத்தினை கைச்சாத்திடுவதற்கு பெருமளவான முயற்சிகள் நடைபெறுகின்றன. இதுவும் படைகளின் பிரசன்னத்தினை அடிப்படையாகக் கொண்டவை தான்.

இந்தப் பின்னணியில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் மனித உரிமைகளை பாதுகாத்தல், மனிதாபிமான செயற்பாடுகளை ஊக்குவித்தல் உள்ளிட்ட விடயப்பரப்புக்கள் காணப்படுகின்றன.

இந்தத் *தலைப்புக்களின் கீழேயே* அண்மைய தசாப்தத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்தின் படைகள் பிற நாடுகளுக்குள் பிரவேசித்துள்ளது. உதாரணமாக கூறுவதாயின் ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மேற்குலப்படைகள் பிரவேசித்தமையை காணக்கூடியதாக உள்ளது.

சிரியாவிலும் அவ்வாறான நிலைமை காணப்பட்டபோதும் அங்கு அப்படைகளின் இலக்குகள் வெற்றி பெறவில்லை. ஆகவே இந்த விடயத்தில் இலங்கைப் பிரஜைகள் அனைவரும் பொறுப்புடனும் அவதானமாகவும் இருக்கவேண்டும்.

தமிழ் மக்களின் மீது அதிகளவான கரிசனைகளைக் கொண்டே மேற்குலக நாடுகள் ஐ.நா.அரங்கில் பிரேரணைகளைக் கொண்டு வருவதாக காண்பிக்கின்றது. இதனை தமிழ் மக்கள் நம்பி ஏமாந்து விடக்கூடாது.

இதில் இந்தியாவுக்கும் பங்குகள் உள்ளன. இந்திய மேற்குல கூட்டானது, தமிழர்களின் விடயத்தினை வைத்தே இலங்கையின் சீனாவுக்கு எதிரான தமது காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றன என்ற யதார்த்தத்தினைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வலைக்குள் தமிழ் மக்கள் சிக்கிக்கொண்டால் உள்நாட்டில் இனங்களுக்கு இடையிலான பிரிவினைகளே அதிகமாக இருக்கும்.

இதனால் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்படாது மேலும் மேலும் அதிகரித்தே செல்வதற்கு வித்திடுவதாக இருக்கும். ஆகவே தாம் பிறியதொரு தரப்பின் நலன்களுக்கு பயன்படுத்தப்படுகின்றோம் என்பதை தமிழ் மக்கள் பூரணமாக விளங்கிக் கொள்ளவது அவசியமாகின்றது.

தற்போதைய அரசாங்கமானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணை தொடர்பிலான விடயப்பரப்பு முன்னெடுக்கப்படும் தருணத்தில் உறுப்புரிமை கொண்ட நாடொன்றைப் பயன் படுத்தி வாக்கெடுப்பினைக் கோர வேண்டும். அதனை விடுத்து வெறுமனே பார்வையாளராக இருந்து விட்டு பிரேரணையை ஏற்கவில்லை. தீர்மானத்தினை நிராகரிக்கின்றோம் என்று கூறுவதால் எவ்விதமான பயனுமில்லை. இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்பினைக் கோருவதன் ஊடாகவே சர்வதேச நாடுகளுக்கு இலங்கை அதற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றது என்பது வெளிப்படும். இந்த விடயத்தினை பலர் அறிந்திருப்பதில்லை.

வெறுமனே இலங்கை அரசாங்கம் நிராகரிப்பதாக ஊடகங்களுக்கு கூறிவருவதால் ஜெனிவாவில் எதுவும் நிகழ்ந்துவிடாது.

தீர்மானம் நிறைவேற்றப்படும் போது இலங்கையும் பார்வையாளராக இருக்குமே தவிர அந்தசந்தர்ப்பத்தில் இலங்கையால் எதனையும் பிரதிபலிக்க முடியாது.

ஆகவே வாக்கெடுப்பினைக் கோருவதே பொருத்தமான செயற்பாடு. அதற்காக உறுப்புரிமை கொண்டதொரு நாட்டை தயார்ப்படுத்த வேண்டியது கட்டாயமாகின்றது. அவ்விதமான செயற்பாடு இம்முறை நடைபெற்றதா என்பது கேள்விக் குறிகின்றது. ஆனால் பிரேரணையை நிராகரிப்பதாக தொடர்ச்சியாக கூறப்படுகின்றது. இறுதியாக எமக்கு எதுவும் தெரியாது என்று பதிலளிக்க முடியாது. அமைதியாக இலங்கை அமர்ந்திருந்தால் அது பிரேரணையை ஏற்றுக் கொள்வதாகவே அமையும் என்றார்.


## 3வது ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09.05.1956

சிவன் அடியில் 29.03.2018

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

## அமரர் சற்குணசிங்கம் ஞானகுணாளன்

எமைப் பிரிந்து ஆண்டு மூன்று ஆனாலும்
விழிகள் என்றும் கண்ணீரால் நிறைகிறது
மனங்களில் உன் மதிமுகம் தோன்றுதையா
தேசமெங்கும் தேடுகிறோம் எங்கள் திரவியத்தை
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சில் வீற்றிருப்பாய்
ஆறாது எம் துயர் அழியாது உன் நினைவு
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நித்தம் உன் நினைவுகளோடு
அம்மா, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்

# நட்சத்திர வேட்பாளர்களும் நட்சத்திரத் தொகுதிகளும்

மக்களைக் கவரும் தேர்தல் அறிக்கை களை அரசியல் கட்சிகள் வெளியிட்டு களத்திற்கு சென்று விட்ட தருணத்தில் நட்சத்திர வேட்பாளர்கள் பிரசாரத்தில் குதித்து விட்டார்கள்.

அவர்களில் முதல்வர் வேட்பாளர்களாக முன்னிறுத்தப்பட்டுள்ளவர்களும் அடக் கம். திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அதன் முதலமைச்சர் வேட்பா ளர் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் சட்ட மன்றத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

சென்னை மாநகரத்தில் உள்ள இந்த சட்டமன்ற தொகுதி புரசை வாக்கம் மற்றும் வில்லிவாக்கம் சட் டமன்றத் தொகுதிகளில் இருந்து பிரித்து உரு வாக்கப்பட்ட புதிய தொகுதியாகும். 2011இல் இங்கு 2734 வாக்குகள் வித்தி யாசத்தில் மட்டுமே வெற்றி பெற்ற ஸ்டாலின் 2016 சட்டமன்றத் தேர்தலில் 37 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சட்டமன்ற எதிர்கட்சித் தலைவரானார்.

முதலமைச்சராக இருக்கும் எடப்பாடி பழனிச்சாமி "எடப்பாடி" சட்டமன்ற தொகுதியில் போட்டியிட வேட்பு மனுவை தாக்கல் செய்து விட்டு பிர சாரமும் செய்து வருகிறார். 1971இல் இருந்து ஒரு முறை மட்டுமே இங்கு திராவிட முன்னேற்றக் கழகம் போட்டி யிட்டு வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் அ.தி.மு.க. 6 முறை வெற்றி பெற்றிருக்கிறது. அதில் நான்கு முறை எடப்பாடி பழனிச்சாமி சட்டமன்ற உறுப்பினராகி தற்போது முதல்வராக வும் இருக்கிறார்.

இந்திய தேசிய காங்கிரஸ் ஒரேயொரு முறை இத்தொகுதியிலிருந்து சட்ட மன்ற உறுப்பினரைப் பெற்றுள்ளது. இந்த தொகுதி பாட்டாளி மக்கள் கட் சியின் செல்வாக்குள்ள தொகுதிகளில் ஒன்றாகும். 1996 சட்டமன்ற தேர்தலில் பா.ம.க. தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற்ற நான்கு சட்டமன்ற தொகுதி களில் இதுவும் ஒன்று. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா இருந்த வரை அ.தி.மு.க. இத்தொகுதியின் செல்வாக்கை தக்க வைத்துக் கொண்டது.

எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அந்த நிலை தவறி விட்டது. அ.தி.மு. க.வின் இன்னொரு ஸ்டார் வேட்பாளர் துணை முதலமைச்சராக இருக்கும் ஓ. பன்னீர்செல்வம். இவர் அக்கட்சியின் ஒருங்கிணைப் பாளரும் கூட. தேனி பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட போடி நாயக்கனூர் சட்டமன்ற தொகுதி யில் போட்டியிடுகிறார். இது 1989இல் அ.தி.மு.க. "ஜெயலலிதா ஜானகி" அணி என பிரிந்து நின்ற போது ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதி. அடிப்படையில் காங்கிரஸ் தொகுதியாக இருந்த இந்த சட்டமன்ற தொகுதியில் 1971இக்குப் பிறகு தி.மு.க. மூன்று முறையும் அ.தி.மு.க. மூன்று முறை யும் வெற்றி பெற்றுள்ளது.

ஓ.பன்னீர்செல்வத்திற்கு தனிப்பட்ட செல் வாக்கு உள்ள தொகுதி இது என் பதை கடந்த தேனி பாராளுமன்றத் தொகுதி வாக்குப் பதிவு காட்டியிரு க்கிறது. 2016இல் ஜெயலலிதா தலை மையிலான அ.தி.மு.க.வில் போட்டி யிட்டு 99 ஆயிரம் வாக்குகளைப் பெற்று சட்டமன்றத்திற்குச் சென்றார் ஓ. பன்னீர் செல்வம். ஆனால் 2019 பாராளு மன்ற தேர்தலில் ஓ. பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத்குமார் போடி நாயக் கனூரில் தந்தையை விட 5000 வாக் குகள் மட்டுமே குறைவாக 94 ஆயிரம் வாக்குகளைப் பெற்று தேனித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருக்கி றார். தற்போது அ.தி.மு.க.வின் ஒரே மக்களவை உறுப்பினர் அவர் தான்.



மக்கள் நீதி மையத்தின் சார்பில் முதல் வர் வேட்பாளராக களத்தில் நிற்கும் நடிகர் கமல்ஹாசன் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட பணம் கட்டி விட்டு அங்கு நடை பயணம் மேற்கொண்டு வாக்குச் சேக ரிப்பில் ஈடுபட்டு வருகிறார். இத் தொகுதியில் 2019 பாராளுமன்றத் தேர்த லில் அவர் சார்பில் நிறுத்தப்பட்ட வேட் பாளர் மகேந்திரன் 23 ஆயிரம் வாக்கு கள் மட்டுமே பெற்றார். மிகவும் ''ரிஸ்க்'' உள்ள இந்தத் தொகுதியை ஏன் நடிகர் கமல்ஹாசன் தேர்வு செய் தார் என்பது பலரது கேள்வி. "நடிகர் அந்தஸ்து" இந்த தொகுதியில் கை கொடுக்கும் என்று அவர் கருதலாம். ஆனால் அ.தி. மு.க., பா.ஜ.க, தி.மு.க, காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அனைத் துமே கணிசமான வாக்கு வங்கிகளை கொண்ட தொகுதி இதுவாகும்

2016இல் பா.ஜ.க. சார்பில் தனியாக போட்டியிட்ட வானதி சீனிவாசன் 33 ஆயிரம் வாக்குகள் பெற்றார். அந்த நம்பிக்கையில் அவர் இப்போது அ.தி. மு.க. கூட்டணி வேட்பாளராக இதே தொகுதியில் பா.ஜ.க. சார்பில் களத்தில் நிற்கிறார். ஆகவே நடிகர் கமல்ஹாசன் தனக்குள்ள "நடிகர் பிரபல்யத்தை" மட்டுமே நம்பி ஆழம் தெரியாமல் கோவை தொகுதியில் காலை விட்டிரு க்கிறாரோ என்ற எண்ணமே மேலோங்கி யுள்ளது என்றாலும் கமல் போட்டிக் குப் பிறகு "கோவை" உள்ளபடியே நட் சத்திர அந்தஸ்துப் பெற்று விட்டது. '

அ.மு.மு.க. சார்பில் ரி.ரி.வி. தினகரன் இன்னொரு முதல்வர் வேட்பாளராக வலம் வருகிறார். தமிழகத்தில் ஆறு முனை போட்டியாக உருவானதை கடைசி நிமிடத்தில் விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க.விற்கு 60 சட்ட மன்ற தொகுதிகளை விட்டுக் கொடுத்து தன்னை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்திக் கொண் டுள்ளார்.

ரி.ரி.வி. தினகரன் தென் தமிழகத்தில் உள்ள கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். 1952இக்குப் பிறகு இந்தத் தொகுதியில் 3 முறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள் ளது. காங்கிரஸ் கட்சி 2 முறையும், அ.தி.மு.க 4 முறையும் வெற்றி பெற்று ள்ளது. இதுவரை தி.மு.க. போட்டி யிட்டு வெற்றி பெறாத தமிழக சட்ட மன்ற தொகுதிகளில் கோவில்பட்டியும் ஒன்றாகும். அ.தி.மு.க. சார்பில் நிற்கும் அமைச்சர் கடம்பூர் ராஜூவிற்கு கடந்த 2016 சட்டமன்றத் தேர்தல் கடும் சவா லாகவே இருந்தது. 428 வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்று "தப்பித்தோம், பிழைத்தோம்" என்று வெற்றி பெற்றார்.

ஆனால் இந்த முறை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இங்கு தி.மு.க கூட்டணியில் போட்டியிடுகிறது. நமக் கும் தி.மு.க. கூட்டணி வேட்பாளரு க்கும் இடையில் தான் போட்டி என்ற நம்பிக்கையில் ரி.ரி.வி.தினகரன் கோவில் பட்டி தொகுதியில் களமிறங்கியிருக் கிறார். "ஸ்டாலினை எதிர்த்துப் போட்டி யிடுவேன்'' என்ற நாம் தமிழர் கட்சி முதல்வர் வேட்பாளர் சீமான் இப்போது திருவெற்றியூர் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுகிறார். அந்தத் தொகுதியில் 2019 பாராளுமன்றத் தேர்தலில் அவர் கட்சி பெற்ற 15 ஆயிரம் வாக்குகளை நம்பி சீமான் வட சென் னையில் உள்ள இத்தொகுதியில் போட்டியிடுகி றார். ஆனால் இத்தொகுதி அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும் மாறி மாறி வெற்றி பெறும் தொகுதி. இரு கட்சிகளும் இதுவரை தலா 5 முறை வெற்றி பெற்றிருந்தாலும் குமரி அனந்தன் போன்ற காந்தியவாதி நின்று வெற்றி பெற்ற தொகுதி எனக் கருதி சீமான் இங்கு போட்டியிடுகிறார்.

நட்சத்திர வேட்பாளர்கள் ஆறு பேரில் சென்னைக்கு வெளியில் எடப்பாடி பழனிச்சாமி, நடிகர் கமல்ஹாசன், ஓ.பன்னீர்செல்வம், ரி.ரி.வி தினகரன் ஆகியோர் போட்டியிடுகிறார்கள், மு.க.



ஸ்டாலினும் சீமானும் சென்னை மாநகர த்திற்குள் உள்ள தொகுதியில் போட்டி யிடுகிறார்கள். இந்த நட்சத்திர வேட்பா ளர்களால் அங்குள்ள வாக்காளர்களும் நட்சத்திர அந்தஸ்து பெற்றுள்ளார்கள் ஆகவே 234 சட்டமன்றத் தொகுதி களில் இந்த ஆறு தொகுதிகளும் இப் போதைக்கு நட்சத்திர தொகுதிகளே"

# உத்தேச ஜெனிவாத் தீர்மானம்:-

(17ம் பக்கத் தொடர்ச்சி) எனவே இம்முறை வரவிருக்கும் தீர்மானமும் அப்படித் தான். அதாவது நிலைமாறு கால நீதிக்குரிய ஒரு தீர்மானம் தான். நிலைமாறு கால நீதி என்பது சாராம்சத்தில் பொறுப்புக்கூறலே. எனவே பொறுப்புக்கூறலை தொடர்ந்தும் மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே வைத்திருப்பது தான் உத்தேச தீர்மானம் வரைபின் நோக்கம். அதோடு சாட்சிகள் மற்றும் சான்றுகளை சேகரிக்கும் உத்தேச பொறிமுறையும் மனித உரிமைகள் பேரவைக்கு கீழ்பட்டது எனில் பொறுப்புக் கூறல் தொடர்ந்தும் மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே பேணப்படும் என்று அர்த்தம். அப்படி என்றால் மூன்று கட்சிகளும் இணைந்து அனுப்பிய ஆவணத்தின் விளைவு தான் என்ன?

அப்படி ஒரு ஆவணத்தை அனுப்பிய கூட்டமைப்பு இப்பொழுது தலைகீழாக வந்திருக்கும் புதிய தீர்மான வரைபை ஏற்றுக்கொள்வதற்கு கூறும் விளக்கம் தான் என்ன? அதைவிட முக்கியமாக தீர்மானத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் எனில் ராஜபக்சவை தோற்கடிக்க வேண்டும் என்று கூட்டமைப்பு கூறுகிறது.

ஆனால் ராஜபக்சக்களைப் பொறுத்த வரை ஜெனீவாவில் வென்றாலும் வெற்றி தான் தோற்றாலும் வெற்றி தான். எப்படி என்றால் தீர்மானத்தை வென்றால் உள்நாட்டில் அவர்கள் அந்த வெற்றியை விற்பனை செய்து தேர்தல் வெற்றியாக மாற்றுவார்கள் தோற்றால் அதையும் விற்பார்கள். வெள்ளைக்கார நாடுகளும் புலம் பெயர்ந்த புலி அமைப்புகளும் சேர்ந்து யுத்த வெற்றியை அபகரிக்கப் பார்க்கின் றன என்று கூறி ஜெனிவாத் தீர்மானத் துக்கு எதிராகவே அரசியல் செய்வார் கள்.

ஜெனிவா அரங்கு எனப்படுவது யுத்தத்தை ராஜபக்சக்கள் வெற்றி கொண்ட விதத்தின் விளைவே. எனவே அது இனப் பிரச்சனையின் 2009க்கு பின்ன ரான நீட்சி தான். எனவே ஜெனிவா அரங்கை முன் வைத்து இனவாத அலையை கிளப்புவது இலகுவானது. தீர்மானத்தில் தோற்றதால் அதை வைத்தே இனவாத அலையை கிளப்பி எதிர்வரும் தேர்தல்களில் ராஜபக்சக்கள் வென்று விடுவார்கள்.

அதாவது ஒவ்வொரு ஜெனிவா கூட்டத் தொடரும் ராஜபக்சகளைப் பொறுத்த வரை யுத்த வெற்றிவாதத்தை ஒவ்வொரு ஆண்டுக்கும் அப்டேட் செய்ய உதவும். எனவே ஜெனிவா தீர்மானத்தில் ராஜபக்சவைத் தோற்கடிப் பது என்பது ஒரு மேலோட்டமான வெற்றி மட்டுமல்ல அதன் தர்க்க பூர்வ விளைவைக் கருதிக் கூறின் அது தமிழ் மக்களுக்கும் ஒருவிதத்தில் தோல்வி தான். தீர்மான த்தை வெற்றி பெற வைப்பதற்காக உறுப்பு நாடு களின் ஆதரவைப் பெறும் பொருட்டு தமிழ் மக்களுக்கான நீதியும் அங்கே பலியிடப்படுகிறது என்பதே இதில் உள்ள கொடுமையான உண்மை ஆகும்.

**(இக்கட்டுரை 21 மார்ச் 2021அன்று வரையப்பட்டது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்க)**

# நம்மவர்

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**– காசிநாதன் –**

தமிழ் நாட்டு அரசியலைப் பொறுத்தளவில் தீர்மானிக்கக் கூடிய சக்திகள் என்பது தி.மு.கவும் அ.தி.மு.கவும ்தான். 1967இல் இருந்து இந்த இரு திராவிடக் கட்சிகள் தான் வலுவான அரசியல் சக்திகளாக இருக்கின்றன. ஆனால் கருணாநிதி ஜெயலலிதா ஆகியோரின் மறைவுக்கு பின் தமிழகத்தில் நிரப்பப்படாத வெற்றிடம் ஒன்று விழுந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

கருணாநிதி — ஜெயலலிதா என்ற இரு சக்திகளின் மறைவுக்கு பின்னர் வருகின்ற இந்த தேர்தலில் யார் அவர்களது வெற்றிடத்தை நிரப்ப போவது என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. மேலும் மாற்று சக்தி ஒன்று உருவாகுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மாற்று சக்தியாக மாறுவோம் என நாம் தமிழர், பா.ஜ.க. என அனைத்து கட்சிகளும் கூறிக் கொண்டு இருக்கின்றன. ஆயினும் அதிகம் எதிர்பார்க்கப்படுபவர் கமல்ஹாசன். அவர் மூன்றாவது அணியாக தாம் வருவோம் என்கிறார்.

மூன்றாவது அணி... நான்காவது அணி என எத்தனை அணிகள் வந்தாலும் அதி.மு.க. தி.மு.க. என்ற இந்த இரண்டு கழகங்களையும் அசைக்க முடியாது என்பது தான் யதார்த்தம். 2016இல் கமலின் மக்கள் நலக்கூட்டணிக்கு ஏற்பட்ட முடிவும் அதைத்தான் தெளிவுபடுத்தியது.

எது எப்படியோ கமல்ஹாசன் தொடங்கிய மக்கள் நீதி மய்யம் கட்சி தன் முதல் சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்கிறது. கட்சியின் முதல்வர் வேட்பாளரான கமல்ஹாசன் எங்கே போட்டியிடப் போகிறார் என்ற கேள்வி பலருக்கும் இருந்தது. தனது சொந்த மண் என்பதால் பரமக்குடியில் போட்டியிடுவார். இல்லை ஆலந்தூரில் போட்டியிடுகிறார், இல்லை சென்னையில் ஏதேனும் ஓர் இடத்தில் களம் காண்பார் என்றெல்லாம் வெளியான தகவல்களுக்குத் தடை போட்டு விட்டு கோவை தெற்கு தொகுதியில் களம் இறங்கியுள்ளார் கமல்ஹாசன்.

அவர் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது. அவர் வேட்புமனுவையும் தாக்கல் செய்து விட்டார். இதனால் இந்தத் தொகுதி நட்சத்திர தொகுதியாக மாறியுள்ளது.

வெற்றியின் விடிவெள்ளி கோவை தெற்கில் முளைக்கிறது. மாநிலம் முழுவதும் நம்மவர்களின் வெற்றிக்கு அது கட்டியம் கூறுகிறது. இருண்ட வானம் ஒளிக்குத் தயாராகிறது. தமிழ் மக்களே நீங்களும் தயார் தானே..?” மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் கோவை தெற்கு



தொகுதியில் களம் இறங்குவதற்கான அறி விப்பு வெளியானவுடன் அவர் போட்ட டுவீட் இது.

மக்கள் நீதி மய்யம் கட்சி 2018ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொடங்கிய ஓராண்டிலேயே மக்கள் நீதி மய்யம், 2019ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்கியது. அப்போது கமல்ஹாசன் போட்டியிடவில்லை. ஆனால் அந்தத் தேர்தலில் தமிழகத்தின் நகர்ப் பகுதிகளில, அதிலும் முக்கியமாக கொங்கு மண்டலத்தில் வாக்குகளைப் பெற்றது மய்யம்.

தமிழகத்திலேயே அதிகபட்சமாக கோவை பாராளுமன்றத் தொகுதியில் டாக்டர் மகேந்திரன் 1,45,104 வாக்குகள் பெற்றார். கொங்கு மண்டலத்தில் சக்தியாக இருந்த அ.தி.மு.க அந்தத் தேர்தலில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை.

கொங்கு மண்டலம் முழுவதுமே மக்கள் நீதி மய்யம் 3—ஆவது இடத்தைப் பிடித்து கவனம் ஈர்த்தது. ஆனால் மக்கள் நீதி மய்யம் அதற்கு முன்பிருந்தே கொங்கு மண்டலத்தைக் குறி வைத்து விட்டது.

2019 பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தியது கோவை கொடிசியா மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தான். கமல்ஹாசன் தெற்குத் தொகுதியை தேர்ந்தெடுத்ததற்குச் சில காரணங்கள் உள் ளன. கடந்த பாராளுமன்றத் தேர்த லில் கோவை மக்களவைத் தொகுதிக் குட்பட்ட ஆறு சட்டசபைத் தொகுதிகளில் மக்கள் நீதி மய்யம் அதிக வாக்குகளைப் பெற்றது இங்குதான் (27,000 வாக்குகள்)

கோவையின் மற்ற தொகுதிகளுடன் ஒப்பிடும் போது இங்கு வாக்காளர்களும் குறைவு தான். மொத்தமே 2,52, 389 வாக்காளர்கள் தான்.

குறிப்பிட்ட சாதியினர் மட்டும் அதிகம் இல்லாமல் வட இந்தியர்கள் சிறுபான்மை இன மக்கள் என்று அனைத்துத் தரப்பு மக்களும் வசிக்கும் பகுதி. முக்கியமாக படித்தவர்கள் அதிகம் இருக்கும் பகுதி. மாற்றம் வேண்டும் என்று நினைக்கும் படித்தவர்களின் வாக்குகள் கடந்த பாராளுமன்றத் தேர்தலிலேயே மக்கள் நீதி மய்யத்துக்கு கணிசமாகக் கிடைத்தன என்கின்றனர்.

அந்த வாக்குகளை மீண்டும் அறுவடை செய்வதற்கே தெற்கு தொகுதியைத் தேர்ந்தெடுத்துள்ளனர். மேலும் கமல் சில மாதங்களுக்கு முன்பு கோவை வந்திருந்தபோது அதிக கூட்டம் கூடியிருந்தது.

இந்தக் காரணங்களால் கமல்ஹாசன் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று அதிக விருப்ப மனுக்கள் கொடுக்கப்பட்டன. இதனால் தீவிரமாக ஆலோசித்து கமல் தனது முதல் தேர்தலில் கோவையில் களமிறங்க உள்ளார்.

கோவை தெற்கு தொகுதியில் பா.ஜ.க., காங்கிரஸ் போட்டியிட உள்ளன. பா.ஜ.க., வில் அந்தக் கட்சியின் தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன் களம் காண்கிறார். கமல்வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு முன்பே மக்கள் நீதி மய்யம் அங்கு பிரசாரத்தையும் தொடங் கி விட்டது. கமலின் வருகை தெற்கு தொகுதியில் மட்டுமல்லாமல் அருகிலுள்ள தொகுதிகளுக்கும் அதன் தாக்கம் இருக்கும் என்று மய்யத்தினர் நம்புகின்றனர்.

அதனால் தான் அந்தக் கட்சியின் துணைத் தலைவர் டாக்டர் மகேந்திரன் சிங்காநல்லூர் தொகுதியிலும் புதுச்சேரி மாநில துணைத் தலைவர் தங்கவேல் கோவை வடக்கு தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

கமல் தேர்தலுக்கு முன்பே தனது பிரசாரத்தை தொடங்கி விட்டார். அத்தோடு பிரசார நடவடிக்கைகளில் நேரடியாகவே பொதுமக்கள் கூடும் இடங்களுக்கு சென்று மக்களோடு மக்களாக தனது பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றார். ஆட்டோ, பஸ்களில் ஏறியும் நடைப்பயிற்சி செய்தும் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றார். கமலை காண மக்கள் கூட்டம் போகும் இடம் எல்லாம் அதிகரிக்கிறது. அவர் சினிமா பிரபலம் என்பதால் அவரை காண வரும் கூட்டம் என்ற விமர்சனங்களும் உள்ளன. ஆனால் ஊழல் இல்லாத ஆட்சி என்பதே கமலின் முழக்கம். வெள்ளித்திரையில் இந்தியனாக வந்து ஊழலை ஒழித்தவர் நிஜத்திலும் அதனை நிறைவேற்றுவாரா என்று பார்ப்போம் கோவை அதற்கான சந்தர்பத்தை வழங்கி கமலுக்கு கை கொடுக்குமா என்று....

# தொல்லியல் ஆய்வுகள் ஒருபோதும் நிறுத்தப்படாது! கூட்டமைப்பின் கோரிக்கையை நிராகரித்தார் அமைச்சர்

தொல்லியல் திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்படும் எந்த ஆய்வு நடவடிக்கைகளும் ஒருபோதும் நிறுத்தப்படாது. அவை தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென தேசிய மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 24 மார்ச் 2021 புதன்கிழமை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.யான ஸ்ரீதரனால் முன் வைக்கப்பட்ட கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோவிலில் இடம்பெறும் தொல்பொருள் திணைக்களத்தினரின் அகழ்வாராய்ச்சியை உடனடியாக நிறுத்த வேண்டுமென்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மேலும் கூறுகையில்

தொல்பொருள் விடயம் எந்த மதத்துக்கோ இனத்துக்கோ குழுவுக்கோ மட்டுப் படுத்தப்பட்டதல்ல. கௌதாரி முனை சிவன் கோவில் உட்பட இரு சிவன் கோவில்களை நாம் இனம் கண்டுள்ளோம் .இவை இரண்டும் புராதன தன்மைகளைக் கொண்டவை. பழைய கட்டிட மரபுகளைக் கொண்டவை. இவை பௌத்த சிங்கள கட்டிடக் கலைகள் என்று கூற மாட்டோம். ஆனால் இவற்றை உறுதி செய்ய தொல்லியல் ஆய்வே உதவும். இவ்வாறான புராதனங்கள் இந்து மதத்துக்கோ பௌத்த மதத்துக்கோ மட்டும் உரித்தானதல்ல. முழு நாட்டுக்கும் முழு உலகத்துக்கும் உரித்தானது. எனவே நாம் தொல்லியல் ஆய்வுகளை செய்யத்தான் வேண்டும்.

இவ்வாறான தொல்லியல் ஆய்வுகளுக்கு தமிழ் எம்.பி.க்களும் வர வேண்டும். தென்பகுதியிலுள்ள இந்து ஆலயங்களில் ஆய்வுகளைச் செய்யாமல் வடக்கு,கிழக்கில் மட்டும் ஏன் ஆய்வுகளைச் செய்கின்றீர்கள் என ஸ்ரீதரன் எம்.பி. கேட்கின்றார். தரவுகள், தகவல்கள் கிடைக்குமிடங்களில் நாம் ஆய்வுகளைச் செய்கின்றோம். நிலங்களுக்குள் என்ன இருக்கிறது என்பது ஆய்வு செய்தால் தானே தெரியும். தென்பகுதியில் அழிவடைந்துள்ள இந்துக் கோவில்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

தொல்லியல் திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்படும் எந்த ஆய்வு நடவடிக்கைகளும் ஒருபோதும் நிறுத்தப்படாது. அவை தொடர்ந்து முன்னெடுக்கப்படும். ஒரு சில தினங்களில் கூட்டமொன்றைக் கூட்டுகின்றேன். நீங்கள் அனைவரும் வாருங்கள்.தொல்லியல் திணைக்களத்தினரையும் அழைக்கின்றேன். அங்கு உங்கள் பிரச்சினைகளைக் கூறுங்கள் என்றார்.



## தமிழ் எம்.பி.க்கள் போர்க்கொடி


வடக்கில் தொல்லியல் திணைக்களத்தால் மேற் கொள்ளப்படும் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன் சார்ள்ஸ் நிர்மலநாதன், ஆகியோர் நாடாளுமன்ற.த்தில் புதன்கிழமை வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக கிளிநொச்சி, உருத்திரபுரம் சிவன் ஆலயத்தில் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிப் பணிகளால் அங்குள்ள மக்கள் மிகவும் கோபமடைந்துள்ளனர். கடந்த 22ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கைக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். குறித்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இது தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் இடம் பெறும் தொல்லியல் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகளில் தொல்லியல் துறையினரை விடவும் இராணுவத்தினரே அதிக அக்கறை கொண்டுள்ளனர்” என்று சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியொர் தெரிவித்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான த.கலையரசன் இவ்விடயம் தொடர்பில் உரையாற்றுகையில் ”தொல்லியல் திணைக்களத்தின் பணியில் ஏன் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர்? நாம் சமாதானத்தை விரும்புகின்றோம். அதே போன்றே எமது ஆலயங்களும் சமாதானத்தையே வலியுறுத்துகின்றன” என்றார். இது போன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியனும் இவ்விவாதத்தில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைக்குத் தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். புதிய ஆர்டர்கள் தொடர்பாக அலையும்படி இருந்தாலும் சாதகமாக முடியும். பணவரத்து திருப்தி தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். பயணங்களின் போது உடமைகள் மீது கவனம் தேவை. குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பெண்கள் மனதிருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். கலைத்துறையினர் புதுமையான சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பர். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபடுவர்.





ரிஷபராசி அன்பர்களே! புத்திசாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும் பாராட்டு கிடைக்கும். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும்படி தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நன்மை தரும். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும். வீண் மாணவர் களுக்கு கவனமாக பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும். விருப்பங்கள் கைகூடும்.




மிதுனராசி அன்பர்களே! பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். சுப பலன்கள் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். நல்ல பெயர் கிடைக்க பெறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பெண்களுக்கு காரியங்களில் தடை தாமதம் ஏற்படலாம் கவனம் தேவை. மாணவர்கள் பாடங்களை கவனமாக படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவர். பொறுப்புகள் அதிகரிக்கும்.




கடக ராசி அன்பர்களே! எதிர்பார்த்த பலன்கள் கிட்டும்.. மனம் மகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். நயமாக பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் பொருள்களை பாதுகாப்பாக வைப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொல்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். பெண்கள் உதவி கேட்டு வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வர். வருமானம் உயர வழி பிறக்கும். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவார்கள்.மாணவர்கள் பாடங்களை கவனத்துடன் படிப்பது அவசியம். வேலைப்பளு காரணமாக வெளியில் தங்க நேரலாம்.




சிம்மராசி அன்பர்களே! சுப செலவுகள் ஏற்படும். சொந்த வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். வாகன யோகம் உண்டாகும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயல்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பர். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். குடும்பத்தினருடன் ஆன்மிக பயணம் செல்லும் நிலை உருவாகும். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை குறையும். செல்வாக்கு உயரும்.




கன்னி ராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் இருந்து வந்த மனகவலை நீங்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல்நிலையில் கவனம் அவசியம். திட்டமிட்டபடி காரியங்களை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். எனவே எந்த ஒரு வேலையை செய்வதாய் இருந்தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் சிலருக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். வெளிநாடு வேலை முயற்சிப்பவர்களுக்கு அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும்படியான சூழ்நிலைகள் மாறும். கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும்.






துலாம் ராசி அன்பர்களே! நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்யோகஸ்தர்கள் புத்தி சாதுரியத்தால் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பர். சொந்த விஷயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பெண்களுக்கு எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்கள் சகமாணவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.




விருச்சிகராசி அன்பர்களே! எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். அனுகூலமான பலன் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். பெண்களுக்கு காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன்களை பெறுவீர்கள்.









தனுசுராசி அன்பர்களே! எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். காரிய அனுகூலம் உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். பெண்கள் நிதானமாக பேசுவது நன்மை தரும். கலைதுறையினர் சக கலைஞர்களிடம் நிதானத்தை கடைபிடிப்பது நன்மை தரும். விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு வரும். மாணவர்கள் மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும்.




மகரராசி அன்பர்களே! எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் காரிய தடங்கல் ஏற்படலாம். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபார போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவார்கள். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவர். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். வேலைப்பளு காரணமாக குடும்பத்தை விட்டு பிரிந்து இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தொய்வு நீங்கும்.




கும்பராசி அன்பர்களே! மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சுணக்க நிலை மாறும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். உங்களுக்கு நற்பெயர் கிடைப்பதில் எந்த இடையூறும் இருக்காது. குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவீர்கள். புதிதாக வீடு, மனை வாங்குவதற்கான வேலைகளைத் தொடங்குவீர்கள். பெண்கள் மற்றவர்களின் பொறுப்புகளை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. வீண் அலைச்சல் மாணவர்கள் பாடங்களில் கவனம் செலுத்துவது நல்லது.




மீனராசி அன்பர்களே! முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவர். மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நல்லது. புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். மாணவர்கள் கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும்.

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த

**அமரர் திரு**
**கமலக்கண்ணன் அரசரெத்தினம்**

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூக சேவையாளரும் இனப்பற்றாளருமான கண்ணன் என்று அழைக்கப்படும் திரு கமலக்கண்ணன் அரசரெத்தினம் அவர்கள்

ஆண்டுகள் ஒன்று உருண்டோடினாலும்
எங்கள் மனதை விட்டு நீங்காது உன் நினைவுகள்
அணையாத ஜோதியாய் மிளிர்கின்றாய்
என்றும் எம்முடன் கமலக் கண்ணா
பாசத்தின் இருப்பிடமே! அன்பின் உறைவிடமே!
எத்தனையோ பேரின் வாழ்வில்
வழிகாட்டியாய் நின்றவனே – நீ
வீழ்ந்த துயர் என்றும் மறையாது
மனமுருகி வேண்டுகின்றோம்
கமலக் கண்ணா!
மீண்டுமொரு பிறப்பெடுத்து
வந்து விடு எங்கள் நண்பனாய்!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
நண்பர்கள், அன்பர்கள்


MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம்
உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta credit™

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



**Scarborough / Downtown Toronto: 416-489-2000**
**Mississauga / Brampton: 416-650-5400**

| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |



Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு
வாங்க...
விற்க...



**Ravi. Paramu**
*Broker*

Cell: **416-262-4176**
Bus: **416-298-3200**

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



**RANJANI THIRUKESWARAN LAW OFFICE**



- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
**416 291 2242**



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)



*Welcoming new patients of all ages since 2000 at...*



Bridletowne Dental

Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist

**416 492 3775**

**Bridletowne Dental**
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com





OVER 10 YEARS EXPERIENCE
**RAVI VEERASINGAM B.A**
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE

**ARVIN-KING**
RABINTHIRARAJ
Broker
416-200-7001




TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*



# COMING SOON



**Markham** $899,000
Bedrooms: 3+1 | Washrooms: 3 | Detached Home



**Ajax** $749,000
Bedrooms: 3 | Washrooms: 4 | Basement Finished



**VIP Platinum Access, Call me for a price list & Floor Plan**

Top 5% Sales Rep In Canada

**Jey. Paramanantham**
Sales Representative
**Dir: 647.295.7784**
Jey.Homelife@gmail.com
www.jeydreamhomes.com

2011 Silver Award | 2012 Gold Award | 2013 Gold Award | 2014 Diamond Award | 2015 Diamond Award | 2016 Chairman Award | 2017 Chairman Award | 2018 Chairman Award | 2019 Chairman Award | 2020 Chairman Award

**HomeLife/Future** Realty Inc., Brokerage*
7 Eastvale Dr, Unit 205, Markham-On, L3S 4N8.
Off: 905.201.9977 Fax: 905.201.9929
*Independently Owned and Operated*

HOMELIFE
HIGHER STANDARDS





**சுயதொழில் செய்வோருக்கான அங்கவீனக் காப்புறுதி.**

மருத்துவ பரிசோதனைகள் தேவையில்லை.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**AJITH SABARATNAM**
INSURANCE & INVESTMENTS INC.

**647 401 5800 / 416 439 2800**

**218 EXPORT BLVD, MISSISSAUGA,
SUITE 209-211, L5S 0A7**